Regd No. 2975

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன்-368

ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர், மஹாவித்வான்

SRI RAMANUJAN

EDITOR:
Mahamahimopadhyaya
P. B. ANNANGARACHARYA, Kanchipuram-631503.

வருட சந்தா ரூ. 10 ஜீவித சந்தா ரூ. 25

பேரருளாளன் பெருந்தேவித்தாயார்
திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்

*ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி॥
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரு
மூய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி॥
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.*

காளயுக்தி௵ மார்கழிமீ

acharya.org

ஷஷ்ட்யப்த பூர்த்தி வைபவம்

4—10—78 அன்று எழும்பூர் பிரபல அட்வகேட் ஸ்ரீ. உ. வே. V. N. வெங்கடவரதாசாரியர் ஸ்வாமியின் மூன்றுவது குமாரர் இண்டியன் ஏர்லைன்ஸில் கமர்ஷியல் மானேஜராக பெரிய பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிற;

ஸ்ரீ. உ. வே. சக்ரவர்த்தி அவர்களின் ஷஷ்ட்யப்தபூர்த்தி

அண்ணா நகரில் அவருடைய கிருஹத்தில் பந்துமித்திரர்கள் புடைசூழ கிரமமான வைதிக காரியங்களுடன் சிறப்பாக நடந்தது. கோயில், திருமலை, பெருமாள் கோவில், திருவல்லிக்கேணி திவ்ய தேசங்களிலிருந்து மாலை அநுக்ரஹங்கள் வழங்கப்பட்டது விசேஷம், 90 திருநக்ஷத்திரம் பூர்த்தியான நம் அட்வகேட் ஸ்வாமி தம்பதிகள் அருகேயிருந்து அந்த தம்பதிகளை அநுக்ரஹிக்க ப்ராப்தமானது பாக்ய விசேஷம். (அந்த ஸந்தர்ப்பத்தில் எடுத்த இரு தம்பதிகளின் உருவப்படம் மேலே காண்கிறது.)

"ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநா சார்யோபயவேதாந்தாசார்யாணும் ஸ்ரீமந் நாதமுநி சரணாரவிந்த ப்ருங்காயமாநமாநஸாநாம் தத்ப்ரஸாதாதிகத ஸகல சாஸ்த்ரரஹஸ்யாநாம் ஸ்ரீவத்ஸவம்ச ஜாதாநாம் ஸ்ரீமத் திருமலை நல்லான் சக்ரவர்த்தி வம்சகூடஸ்தாநாம் உருப்புட்டூ ராச்சான்ஸம்ஜ்ஞகாநாம் தத்ரபவ்தாம் ஸ்ரீமதாம் வரதாசாரியாணும் ஸம்பாவநா.

இதன் தொடர்ச்சியை நாபர் மூன்றுவது பக்கத்தில் பார்க்.

acharya.org

ஸ்ரீ ராமானுஜன் 368



ஆசிரியர்:

மஹாமஹோபாத்யாய ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம்

மகாவித்வான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

தொகுதி 31 | காளயுக்தி௵ மார்கழி௴ 15—12—1978 | பகுதி—8

மார்கழித்திங்கள் விண்ணப்பம்

வித்வான்களும் ரஸிகர்களும் பஹுச்ருதர்களுமான பெரியார் பலர் ஆங்காங்கு நிகழ்த்தி வரும் திருப்பாவையுபந்யாஸ கோஷ்டிகளில் அந்வயித்துக் களிக்க அவகாசமில்லாதவர்கள் இருந்தவிடத்திலேயேயிருந்து கொண்டு ஒருவாறு அநுபவித்து ஆனந்திப்பதற்குப் பாங்காகத் திருப்பாவை முப்பது பாசுரங்களுக்கும் சிற்சில விசேஷார்த்தங்களை இச்சஞ்சிகையில் சுருங்க வெளியிடுகிறோம். விரிவாக அநுபவிக்க விருப்பமுடையவர்கள் பூர்வாசார்ய வியாக்யானங்களையும், அவற்றைத் தழுவி ஏற்கனவே நாம் வெளியிட்டுள்ள

"திருப்பாவை திவ்யார்த்ததீபிகை"

"திருப்பாவை நறுமணம்"

என்னும் பெயர்பூண்ட இரண்டுஉரைகளைக்கொண்டும், முந்துற முன்னம் ப்ரஸ்தாவித்தபடி ஆங்காங்கு நடைபெறும் காலக்ஷேப கோஷ்டிகளில் அந்வயித்தும் இன்பமெய்தக்கடவர்கள்.

மேலே ப்ரஸ்தாவிக்கப்பட்ட தீபிகையுரையும் நறுமணவுரையும் நம்முடைய க்ரந்தமாலா கார்யாலயத்திலும் சென்னை கோவிந்தப்பநாய்க்கன்தெரு. 48 நெ. உப்பட்டூர் ஆழ்வார்செட்டி ராமானுஜ கூடத்திலும் கிடைக்கும். தீபிகையின் விலை 2-50. நறுமணத்தின் விலை 4-00 பூர்வாசார்யர்களருளிய மூவாயிரப்படியும் ஆறாயிரப்படியும் கிடைக்கும் விலை 5-00.

acharya.org

ஸ்ரீ:

ஆண்டாள் அருளிய திருப்பாவையின் அவதாரிகை

ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறங்காநிற்க, எம்பெருமான் தானாகவந்து அவர்களை உணர்த்த, பிறகு உணர்ந்தனர் அவர்கள். ஆண்டாள் அங்ஙனன்றி மணத்துடன் முளைக்கும் திருத்துழாய்போன்று எம்பெருமான் திறத்து ஆராத காதலுடன் அவதரித்து இவள் தானே அவ்வெம்பெருமான் ஸந்நிதியிற் சென்று "உம்பர்கோமானே! உறங்காதெழுந்திராய்" என்று அவனை உணர்த்தினளாதலால் ஆழ்வார்களினும் ஆண்டாளுக்குள்ள வைலக்ஷண்யம் சொல்லாற் கூறும்பரமன்று. அன்றியும் ஆடவரை ஆடவர்கண்டு காமுறுவதிற் காட்டிலும் பெண்டிர் கண்டு காமுறுதல் பள்ளமடையா யிருக்குமென்பது உலகத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால் புருஷோத்தமன் விஷயத்தில் ஆழ்வார்களின்காமம் போல் மேட்டுமடையாயிருக் கையன்றியே இவ்வாண்டாளுடைய காமம் பள்ளமடையா யிருக்கையாகிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்றுநோக்கத்தக்கது. ஆழ்வார்கள் காமத்தின் மெய்ப்பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்துப் பேசினார்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக் கொள்ளவேண்டிய தொன்றுமில்லையே. ஸஹஜமானஞானபக்திகளுடன் வளர்ந்தருளாநின்ற சூடிக்கொடுத்தசுடர்க் கொடி ஒரு கொள்கொம்புடன் கூடவேண்டும் பருவமாய், "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்றுகொண்டு *அங்கைத் தலத்திடை யாழிகொண்டானவன் முகத்தன்றி விழியாதாளாய், ஸ்ரீ வில்லி புத்தூரில் எழுந்தருளியிராநின்ற வடபெருங்கோயிலுடை யானுடனே தழுவி முழுசிப் பரிமாறப்பெற வேணுமென்று விரும்பிச்செல்ல, அவ்விருப்பத்திற் கிடாக வடதளசாயி முகங்காட்டாமையாலே மிகவும் மனம் நொந்து "இவ்வெம்பெருமானோடு கலவி பெற்றுக் களித்தார் ஆரேனுமுண்டோ?" என்று ஆராய்ந்தவிடத்து, திருவாய்ப்பாடி யிலுள்ள அஞ்சுலக்ஷங்குடி ஆயர்மங்கைகள் இவனுடன் கலந்து களிக்கப்பெற்றார்கள்" என்றுணர்ந்து, "அக்கலவி காலாந்தரத்தில் நடந்ததொன்றாகையாலே அதில் நமக்கு அந்வயமின்றி யொழிந்தது; இனி அவன் உலாவிப்போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுனா நதியும், அவன் கோநிரைகாக்க எடுத்த கோவர்த்தனகிரியும் கிடந்தனவாகில், அவற்றைக் கொண்டாகிலும் தரிப்போம்" என்று அங்குச் செல்ல நினைக்க, பகவத் விரஹத்தாலே உடல் மெலிவுற்ற இவ்வாண்டாள் அவ்வளவு செல்லமாட்டாதாளாய், ஜனகராஜன் தன் மகளான சீதைக்கு வில்முறி என்று ஒரு அவதி வைத்தாப்போலவும், கும்பர் தம் மகளான நப்பின்னைப் பிராட்டிக்கு ஏறுதழுவல் என்று ஒரு அவதி வைத்தாப் போலவும் நம் தந்தை நமக்கு ஓர் அவதியும் கற்பிக்கவில்லையே! இனி நாம் வாழ்வது எங்ஙனேயோ?" என்று சிந்தித்துத் தளர்ந்திருக்க; பண்டு கண்ணபிரான் ராஸக்ரீடை செய்கையில் திடீரென்று பிரிந்து மறைந்த போது கோபிகள் அனைவரும் தாங்கள் கண்ணபிரான் செயல்களை அநுகாரஞ்செய்து ஒருவாறு துயர் தீர்ந்து தரித்தார்கள் என்று பெரியார் சொல்லக் கேட்ட ஆண்டாள் தானும் அவ்வாய்ச்சிகள் நோன்பு நோற்றபடியை அநுகரித்துத் தரிக்கும்படியைக் கூறுவது, திருப்பாவையென்கிற இத் திவ்யப்ரபந்தம். ... ... — ❁

அவதாரிகை முற்றுப் பெற்றது.

1. மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளால்

மார்கழித் திங்கள் — மார்கழிமாதமென்றபடி. மார்க்க சீர்ஷமென்கிற வடசொல் மார்கழி யெனத் திரிந்தது. இதை [மார்க்க — சீர்ஷ] என்று பிரித்து மார்க்கங்களில் தலையானது என்று பொருள் கொண்டு, உபாயங்களில் எது சிறந்ததோ அது இந்தத் திருப்பாவைக்கு ப்ரதிபாத்யம்

acharya.org

என்று கொள்வது. கர்மஜ்ஞானபக்தி ப்ரபத்திகளுக்கு மேற்பட்டது ஆசார்யாபிமாநம்; ஆண்டாள் தமது திருமொழியில் "வில்லி புதுவை விட்டு சித்தர் தங்கள்தேவரை, வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டும்' என்றும், 'கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார் சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே" என்று மருளிச் செய்தவற்றை இங்கு விவரிக்க.

நீராடப்போதுவீர்! போதுமினோ—ஒரு தடாகத்திற்குப் போயன்றோ நீராடவேணும்; இவர்கள் மெய்யே தடாகத்திற்குத்தான் சென்றார்கள். முகுந்த மாலையில் "கரசரணஸரோஜே காந்திமந்நேத்ரமீநே ச்ரமமுஷி புஜவீசிவ்யாகுலே அகாத மார்க்கே, ஹரிஸரஸி விகாஹ்ய" என்றும், ஸ்ரீ ரங்கராஜஸ்தலத்தில் "உத்புல்ல பங்கஜதடாகமிவோபயாதி ஸ்ரீ ரங்கராஜம்" என்றும், ※பிப நயந புரஸ் தே ரங்கதுர்பாபிதாநம் ஸ்திதமிவ பரிபுல்லத் புண்டரீகம் தடாகம்" என்றும் சொன்ன தடாகத்திற்கேயன்றோ செல்லுகின்றனர், திருவாய்மொழியில் (8-5-1.) ※கண்கைகால் தூய செய்ய மலர்களா சோதிச் செவ்வாய் முகிழதா, சாயல்சாமத்திருமேனி தண் பாசடையா, தாமரை நீள்வாசத்தடம்போல்வருவானே※ என்றபாசுரம் விளக்கியுரைக்கத்தக்கது.

2. வையத்து வாழ்வீர்காள்!—※கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்டவின்பங்களை நுகர்ந்து [விஷயப்ரவணர்களாய்] மாய்ந்து போவதற்கிடமான இவ் விருள் தருமாஞாலத்திலும்※வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே ※என்னும்படி வாழாட்பட்டு நின்றிருப்பவர்களே! என்று விளித்தபடி. செய்யுங்கிரிசைகள் = விடவேண்டியவற்றை விடுதலும். 'பற்றவேண்டியவற்றைப் பற்றுதலும் செய்யாதன-செய்யோம்—செய்யத்தகாத வற்றை-நிஷித்தங்களைச்செய்யமாட்டோமென்றபடியன்று. சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவை யாயிருந்தாலும் முன்னோர்கள் செய்யாதவற்றைச்செய்யோமென்றபடி, மேல்(26-ஆம்பாட்டில்) ※மேலையார் செய்வனகள்வேண்டுவன கேட்டியேல் ※ என்றதையுங் கூட்டிக்கொள்க. தீக்குறளை யென்றது இரண்டாம் வேற்றுமையன்று. முதல்வேற்றுமை, (குறளைச்சென்று) என்றோத லாகாது;குறளைசென்று என்க.உய்யுமாறெண்ணுதல்-ஜ்ஞானசக்திபலைச்வர்யவீர்யதேஜஸ்ஸுக் களாகிற ஷாட்குணயத்தையெண்ணுதல்※ அஹமேவ பரம் தத்வமித்யாதியான திருக்கச்சிநம்பி யாறுவார்த்தைகளையெண்ணுதல், ஷட்கம்ஷட்கமான பகவத்கீதையையெண்ணுதல். ※மாறன் பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் கூறின ஆறங்கங்களையெண்ணுதல். ... (2)

3. ஓங்கியுலகளந்த உத்தமன்!—தான் வாழ்ந்து பிறரைக் கெடுப்பவன் மத்யமன் தானுங்கெட்டுப் பிறரையும் கெடுப்பவன் அதமன். தான் கெட்டுப் பிறரை வாழ்விப்பவன் உத்தமன், உத்தமோத்தமவகுப்பும் அதமாதமவகுப்புமுண்டு. பெரியார்களின் உபந்யாஸங்களில் கேட்டுணர்க [தீங்கின்றிநாடெல்லாம்]※அதிவ்ருஷ்டி ரநாவ்ருஷ்டிர்மூஷகாச் சலபாச் சுகா:, அதி க்ரூராச்சராஜாக: ※இத்யாதிகள் உலகத்தீங்குகள், அஷ்டச்லோகியில் பட்டர்※தேஹாஸக்தாத்ம புத்திர் யதி பவதி※இத்யாதியான நான்காவது சுலோகத்தில் ஸாதிக்குமவை ஆத்ம க்ஷோபங்கள். மும்மாரி—"வேதமோதிய வேதியர்க் கோர்மழை, நீதிநன்னெறி மன்னவர்க்கோர் மழை. மாதர் மங்கையர் கற்பினுக்கோர்மழை, மாதமூன்றுமழையெனப்பெய்யுமே" இதுவொருமும்மாரி, ரஹஸ்யத்ரயார்த்தவ்ருஷ்டி, தத்வத்ரயார்த்தவ்ருஷ்டி, ஷட்கத்ரயார்த்தவ்ருஷ்டி, இங்ஙனே யொரு மும்மாரி தத்வஹித புருஷார்த்தவ்ருஷ்டியுமாம். ... ... (3)

4 ஆழிமழைக்கண்ணாவொன்று நீகைகரவேல்—"லக்ஷ்மீநாதாக்யஸிந்தௌ சடரிபுஜலத: ப்ராப்ய காருண்யநீரம் நாதாத்ரௌஅப்யஷிஞ்சத் ததநுரகுவர:அம்போஜசக்ஷுர்

acharya.org

ஜ்ஜராப்யாம்,கத்லா தாம் யாமுநாக்க்யாய் ஸரிதம் அதய தீந்த்ராக்க்ய பத்மாகரேந்த்ரம் ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி ஸததம் தேசிகேந்த்ரப்ரமௌகை:, என்று ஆச்சான்பிள்ளையருளிய சுலோகரத்னம் இங்கே அநுஸந்தேயம் எம்பெருமான்-கடல்' நம்மாழ்வார் காளமேகம், அருள் வெள்ளம்-நீர்-ஸ்ரீமந்நாதமுனிகள்-மலையுச்சி,உய்யக்கொண்டார், மணக்கால்நம்பிகள்-பெருகுமிரு வெள்ளம், யமுனைத்துறைவர் (ஆளவந்தார்) ஆறு; ஏரி-எம்பெருமானார், எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநாதிபதிகள் (வீராணத்தேரியின் மதகுகள் போன்ற) எழுபத்து நான்குமதகுகள். இவ்வழியாக நாம் வாழ்கிறோம். ... ✠

5 மாயனை மன்னுவடமதுரைமைந்தனை "✠அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ , ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத:. ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யாநம் புஷ்பம் ததைவச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்✠என்னப்பட்ட அஷ்டவித புஷ்பங்களே தூமலர்களாம்,

திருமங்கையாழ்வார்✠இனமலரெட்டுமிட்டிமையோர்கள்✠என்றும்; கந்தமாமலரெட்டுமிட்டு என்றும் எட்டுமலரென்றருளிச் செய்தமை காண்க. [போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்] உபநிஷத்துக்களில் ப்ரஹ்மவித்துக்களைப்பற்றி ஓதுமிடங்களில், சிலவிடங்களில் பாபங்கள் தாமரையிலைத்தண்ணீர் போலே ஒட்டமாட்டா என்றும், சிலவிடங்களில் தீயினில் தூசு போல நசித்துவிடுமென்றும் சொல்லிற்று. ஒட்டினாலன்றோ நசிக்க வழியுண்டு; ஒட்டவேமாட்டாதவை எங்ஙனே நசிக்கும்படி? என்று கேள்வி பிறக்கும், கேண்மின்: ப்ரஹ்மஜ்ஞானமுண்டாவதற்கு முன்பு ஒட்டிக்கிடந்த பாவங்கள் நசிக்கும். ப்ரஹ்மஜ்ஞானமுண்டான பின்பு ப்ரமாதாதிகளாலே நேரும் பிழைகள் ஒட்டவேமாட்டாவென்கை. இதையிட்டே பூர்வாகமென்றும் உத்தராகமென்றும் வகையிட்டது. ... ... (5)

6. [புள்ளுஞ்சிலம்பினகாண் — பெரியாழ்வார்]

6. புள்ளும் சிலம்பினகாண் இப்பாட்டுமுதல் *எல்லேயிளங்கிளியேயென்கிற பதினைந்தாம் பாட்டளவும் பத்துப்பாசுரங்களாலே ஆண்டாளுக்குமுந்தின ஆழ்வார்கள் எழுவரையும், பிந்தின ஆழ்வார்கள் மூவரையும் அடைவுதப்பாமல் எழுப்புகிறது. அடைவு தவறாமையை உற்றுநோக்குக. முந்தினஎழுவரை யெழுப்புவது கீழ்வரிசையாக, பிந்தினமூவரையெழுப்புவது மேல் வரிசையாக என்று கண்டுகொள்வது.

இது பெரியாழ்வாரைத் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரம். பிள்ளாய்! என்பது இதில் விளி. அறிவில்லாதவனைப் பிள்ளை யென்பது எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலிய திருக்குணங்களை மறந்தே இவ்வாழ்வார் மங்களாசாஸனத்தில் ஒருப்பட்டாராதலால் பிள்ளை யென்னத் தகுதியுடையராயினர் "ஜ்ஞாநவிபாக கார்யமான அஜ்ஞானத்தாலே வருமவையெல்லாம் அடிக்சழஞ்சுபெறும்" என்ற ஸ்ரீவசனபூஷண திவ்ய ஸூக்தியும் மங்களா சாஸநத்திற்கு அஜ்ஞானத்தையே மூலமாகக் காட்டிற்று, இவ்வாழ்வார்பெரும்பாலும் நந்தவனத்திலேயே போதுபோக்குவராதலால் அவ்விடத்து அடையாளமாகிய 'புட்களின் சிலம்புதல்' முன்னே கூறப்பட்டது புள்ளரையன் என்று பெரிய திருவடியின் அம்சமாகத் திருவவதரித்தவர் என்று குருபரம்பரா ப்ரபாவாதிகளிற் கூறியுள்ள விஷயம் முத்ராலங்கார ரீதியில் ஸூசிதமாகிறது. 'வெள்ளை விளிசங்கு' என்கிற சொல்தொடர் முதன் முதலாகப் பெரியாழ்வாருடைய திருவாக்கில் தோன்றியது; (பெரியாழ்வார் திருமொழி 4—1—7 காண்க) அதனை இங்கு அநுவதித்துக் காட்டுவது ஒருவகையான லிங்கம் [பேய்முலை நஞ்சுண்டு] பெரியாழ்வார்

acharya.org

திருமொழியில் (சீதக் கடலில்) கண்ணபிரானுடைய சரித்திரங்களில் பேய்முலை நஞ்சுண்ட கதை முதன் முதலாக அநுஸந்திக்கப்பட்டது. "பிறங்கிய பேய்ச்சி முலை சுவைத்துண்டிட்டு" என்றது காண்க. மறுபடியும் அந்தச் சரித்திரத்தை அநுஸந்திக்கையில் சகடாஸுர பங்கத்தையும் கூட்டி யநுஸந்தித்தார் "நாள்களோர் நாலைந்து' என்ற' பாசுரங் காண்க. அதற்குப் பொருந்த இங்கு "பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடங்கலக்கழியக் காலோச்சி" என்றது. "வெள்ளத்தரவில்" என்று தொடங்கிப் பெரியாழ்வார்க்குள்ள 'விஷ்ணுசித்தர்' என்னும் திருநாமமும் அதற்கு விவரணமான "அரவத்தமளியினோடும்" "பனிக்கடலில் பள்ளிகோளை" என்ற பாசுரங்களின் தாற்பரியமும் நன்கு ஸூசிதம. ... ... (6)

7 கீசுகீசென்றெங்கும். (குலசேகராழ்வார்)

இது பெரியாழ்வார்க்கு அடுத்த முந்தினவரானகுலசேகராழ்வாரை யுணர்த்தும்பாசுரம், 'பேய்ப்பெண்ணே!' நாயகப் பெண்பிள்ளாய்! தேசமுடையாய்!, என்ற மூன்று விளிகளும் குலசேகராழ்வாரை வற்புறுத்துவன. பெருமாள் திருமொழியில் "மெய்யில் வாழ்க்கையை" என்றவொரு பதிகத்தினுல் தம்மைப் பெரும் பேயராகச் சொல்லிக்கொண்டவர் இவ்வாழ்வார் "ஏர் மலர்ப்பூங்குழல், ஆலைநீள் கரும்பு, மன்னுபுகழ்க் கௌசலைதன்" என்ற பதிகங்களில் பல பெண்களின் தன்மையை யடைந்து பேசினுருமிவர் "கொல்லி காவலன் கூடல் நாயகன்" என்று அரசரான தன்மை தோற்றப் பேசினராதலால் நாயகப் பெண் பிள்ளாய் என்றது. அன்றியும், ஒரு ஹாரத்தில் நட்ட நடுவிலுள்ள மணியை 'நாயகக்கல்' என்பதுண்டு. குருபரம்பரையில் எம்பெருமானுரை நடுநாயகமென்று யதிராஜ ஸப்ததியில் தேசிகன் கூறினர்; 'யதிராஜேந நிபத்த நாயக ஸ்ரீ மஹதீ குருபங்க்தி ஹாரயஷ்டி;" என்றுர். அதுபோலவே ஆழ்வார்களுள் குலசேகரர் நடுநாயகமாக வுள்ளவர். பொய்கையார் பூதத்தார் பேயார் மழிசையர் மாறன் என முன்னே அவர்; பட்டநாதன் கோதை தொண்டரடிப் பொடிகள் பாண்பெருமான் கலியன் எனப் பின்னே ஐவர்; நடுவே குலசேகரர். ஆகவே இதுபற்றியும் நாயகப் பெண்பிள்ளாய் என்ற விளி நன்கு பொருந்தும். [தேசமுடையாய்!] பகவத் கீதையில் [18—43] "சௌர்யம் தேஜோ த்ருதிர் தாக்ஷ்யம் – க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்" என்று தேஜஸ்ஸு க்ஷத்திரிய தர்மமாகச் சொல்லப் பட்டிருப்பதற்கிணங்க இந்த விளி இவ்வாழ்வாருடைய க்ஷத்திரியத்வத்தைத் தெரிவிக்கும். அன்றியும், 'தேவத்வமும் நிந்தையானவனுக்கு ஒளிவரும் ஜநிகள் போலே ப்ரஹ்மஜன்மமும் இழுக்கென்பார்க்குப் பண்டை நாளில் பிறவி உண்ணுட்டுத் தேசிறே' என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீ ஸூக்தியின் படியும், அதற்கு மூலமான "மண்ணுட்டிலாராகி யெவ்விழிற்றுனுலும், ஆழியங் கைப் பேராயற்கு ஆளாம் பிறப்பு—உண்ணுட்டுத் தேசன்றே" என்ற பெரிய திருவந்தாதிப் பாசுரத்தின்படியும் பகவத் சேஷத்வத்திற்கு அநுகூலமான பிறப்பே தேஜஸ்ஸென்று நிர்ணயிக் கப்படுகிறது; அப்படிப்பட்ட பிறப்பை "ஊனேறு செல்வத்து" என்ற பதிகத்தில் பாசுரந் தோறும்ஒரே விதமாக விரும்பினவர் இவ்வாழ்வாரேயாதலால் தேச முடையாவர் இவரேயாகத் தகும் இப்பாட்டில் "ஆனைச்சாத்தன்" என்ற பதப்பிரயோகம் கவனிக்கத் தக்கது. இச்சொல் மலையாள பாஷையிலிருந்து திசைச் சொல்லாகத் தமிழில் வழங்குவதென்பர். (ஆனசாதம்) என்று மலைநாடர் வலியனென்னும் பறவையை வழங்குவராம், இவ்வாழ்வார் மலைநாட்டில் திருவவதரித்தவராதலால் அத்திசைச்சொல் இங்குப் பரவசமாகவே அமைந்தது போலும். காசும் பிறப்பும் என்று ஆபரண விசேஷங்களைப் பற்றின ப்ரஸ்தாவமிருப்பது இவ்வாழ்வாருடைய சரிதையில் ஆபரண ப்ரஸ்தாவமுள்ளவாற்றை ஒருவாறு நினைப்பூட்டும், 'ஆரங்கெடப்பரனன்பர் கொள்ளாரென்று அவர்களுக்கே வாரங்கொடு குடப்பாம்பில் கையிட்டவன்" என்ற தனியனும்

ஸ்மரிப்பது. "வாசநறுங்குழ லாய்ச்சியர் மத்தினுலோசை படுத்த தயிரரவம்" என்றது பெருமாள் திருமொழியில் "கெண்டை யொண்கண் மடவாளொருத்தி கீழையகத்துத் தயிர்கடையக்கண்டு-வண்டமர் பூங்குழல் தாழ்ந்துலாவ... தண் தயிர் நீ கடைந்திட்ட வண்ணம்" என்ற பாசுரத்தச் சொற்சுவைகளை நன்கு நினைப்பூட்டும். [நாராயணன் மூர்த்தி கேசவனைப் பாடவும்] கிருஷ்ணாவதாரத்தில் குதிரைவடிவாகவந்தகேசியென்னுமஸுரனை வதஞ்செய்ததனுல் கேசவனென்றது; இவ்வாழ்வார் தமது திருமொழியில் முதன் முதலாக இந்த வரலாற்றையே பேசி யநுபவித்தார் "மாவினை வாய் பிளந் துகந்தமாலை" என்று; ஸ்வப்ரபந்தத்தை "நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே" என்று நாராயணனைப் பாடித்தலைக்கட்டினுர். [கேட்டே கிடத்தியோ] இவ்வாழ்வார் நாடோறும் அந்தணர்களைக்கொண்டு ஸ்ரீராமாயணபாராயணஞ் செய்வித்துத் தாம் கேட்டவர் கேட்டு இருந்தவிடத்திலிராமல் படையெடுத்துச்சென்றவர். அது இவருடைய சரிதையில் விசதம். ... — ... (7)

8 கீழ்வானம் வெள்ளென்று [நம்மாழ்வார்]

கீழ்வானம் வெள்ளென்று—நம்மாழ்வார். குலசேகராழ்வார்க்கு அடுத்த மூந்தினவரான நம்மாழ்வாரையுணர்த்தும் பாசுரமிது கோதுகலமுடைய பாவாய்! என்றவிளி நம்மாழ்வாரை வற்புறுத்தும். 'கோதுகுலமுடைய' என்று வழங்கிவரும் பாடம் பரமக்ருபையுடன் மறக்கத் தக்கது. அப்பாடம் நெடுநாளாகவே நாடெங்கும் பரவியதனுலாய அநர்த்தம் பெரிதுமுண்டு. ஸ்ரீ பரகாலஸ்வாமி தம்முடைய வியாக்கியானத்தில் "குலம் குலமாக வுனக்குப் பரிசர்யை பண்ணும்படி .....'' என்றுரைத்திட்டார். அது 'கோதுகுலமுடைய' என்கிற (தவறுதலான) பாடத்தில் அபிநிவேசத்தினுல்போலும். வஸ்துதஸ்து வடமொழியில் கௌதூஹலம் என்ற சொல் தமிழில் கோதுகலமெனத்திரிந்தது. இதில் குகாரம் நுழைய ப்ரஸக்தியில்லை. "கோதுகலமுடைக்குட்டனேயோ' என்றுர் பெரியாழ்வாரும். கோதுகலமாவது ஆசை; ஆசையையுடைய என்றது. எம்பெருமானிடத்தில் ஆசையையுடைய அல்லது எம்பெருமானுடைய ஆசையைத் தன்னிடத்தில் கொண்டுள்ள — என்று இருவகையாகவும் பொருள்படும் பட்டர் நம்மாழ்வாரைப்பற்றிப்பேசும்போது' ரிஷிம் ஜுஷாமஹே க்ருஷ்ணத்ருஷ்ணாதத்வமிவோதிதம்' என்று க்ருஷ்ண குதூஹலமே நம்மாழ்வாராக வடிவெடுத்தது என்றுர். க்ருஷ்ண த்ருஷ்ணா என்றதும் க்ருஷ்ணனிடத்தில் த்ருஷ்ணை, க்ருஷ்ணனுடைய த்ருஷ்ணை என இருவகையாகவும் விரியும். இதனுல் தேறினபொருளை "கைம்மா துன்பொழித்தாயென்றுகைதலைபூசலிட்டே,மெய்ம்மாலாயொழிந்தேன் எம்பிரானுமென்மேலானே" என்றபாசுரத்தினுல் நம்மாழ்வார்தாமே வெளியிட்டருளினர். "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் ஸ ச மம ப்ரிய" என்றபடி நானும் எம்பெருமானிடத்துக் குதூகலங்கொண்டேன் அவனும் என்னிடத்துக் குதூகலங்கொண்டான் என்றருளிச் செய்தவர் நம்மாழ்வார். பாவாய்! என்ற விளியும் இவர்க்குப் பொருந்தும், திருவாய்மொழியில் "சூழ்வினை யாட்டியேன் பாவையே" என்றும் "என்பாவை போயினித் தண்பழனத் திருக்கோளூர்க்கே" என்றும் பலவிடங்களில் தம்மைப் பாவையாகச் சொல்லிக் கொண்டவர் இவ்வாழ்வார் 'எழுந்திராய்' என்றசொல்லாற்றல் நன்கு நோக்கத்தக்கது; உட்கார்ந்திருப்பவரையன்றோ எழுந்திரா யென்பது. மற்றையாழ்வார்களெல்லாரும் அர்ச்சையில் நின்ற திருக்கோலமாகவேயுள்ளார். நம்மாழ்வாரொருவரே வீற்றிருந்த திருக்கோலம் "பத்மாஸநோபவிஷ்டம்' என்கிற பூர்வாசார்யச்லோக ரத்னமும் இங்கு அநுஸந்தேயம் [கீழ்வானம் வெள்ளென்று.] உதயகாலத்தில் கிழக்கு வெளுக்கும். இங்கும் வகுளபூஷண பாஸ்கரோதய மாதலாலும், அதுதானும் கலியுகத்தின் உதயகாலத்திலாதலாலும் கிழக்கு வெளுத்ததாகச் சொல்லிற்று. கீழ்வானமென்றபோதே மேல்வானம் நினைவுக்கு வரும். நித்தியவிபூதி மேல்வானமாகும், லீலாவிபூதியானது நம்மாழ்வாருடைய திருவாய்மொழியவதாரத்தாலே

acharya.org

'ஓராயிரத்துள்ளிப்பத்து உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்'' "வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர்மண்ணூடே" இத்யாதிப்படியேதானேபரமபதமாயிற்று ஆகவே கீழ்வானமான இவ்விபூதி வெள்ளென்றது [எருமை சிறுவீடு மேய்வான்] வீடு என்று மோக்ஷம்: சிறு வீடு என்று கைவல்ய மோக்ஷம். இந்த ஸங்கேதமிட்டருளினவர் நம்மாழ்வார், திருவாய்மொழியில் (4-1-10) "குறுக மிகவுணர்வத்தொடுநோக்கி" என்ற பாசுரத்தின் பொருள்கொண்டு இஃது அறியத்தக்கது. எருமையென்பது தாமஸப்ரக்ருதிகளை, நம்மாழ்வார் திருவவதாரம் செய்தருள்வதற்கு முன்னே பலரும் தாமஸப்ரக்ருதிகளாய் நல்வீடு செல்லாது சிறுவீடு முதலியவற்றிற் சென்று பாழாயினர் என்பது இங்கு ஸூசிதம். [மிக்குள்ள பிள்ளைகளுமித்யாதி] மற்றைப் பிள்ளைகளையும் போகவொட்டாமல் தடுத்து இப்பிள்ளை வாசலில் வந்து துவள்வதனால் இவளுக்குண்டான விலக்ஷணமான ஏற்றம் தோற்றுவதுபோல, மற்றையாழ்வார்களிற் காட்டில் நம்மாழ்வார்க்குண்டான ப்ரபந்நஜந கூடஸ்தத்துவமாகிற ஏற்றம் தோற்றுவிக்கப்பட்டது. போவான் போகின்றாரை' என்றபிரயோகம் வெகு ஆச்சரியமானது: போவதற்காகப் போகிறவர்கள்'. என்று சொல்லுவதுண்டோ? இல்லை, அப்படியிருக்க ஏன் சொல்லிற்று? போவதுதானே ஸ்வயம் ப்ரயோஜனமென்று காட்டுவதற்காகவே சொல்லிற்று. இத்தகைய பிரயோகம் முதன்முதலாக நம்மாழ்வார் திருவாக்கில் தான் வந்தது. திருவிருத்தத்தில் "போவான் வழிக்கொண்ட மேகங்களே!" என்றார். [உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்] கூவிக்கொள்ளும் காலமின்னங் குறுகாதே "என்னைக் கூவியருளுவாய் கண்ணனே' "கூவிக்கொள்ளாய் வந்தந்தோ, 'என்றுபலகாலும் விரும்பினபடியே கூவுவான் வந்துநின்றோமென்கிறார்கள். [மாவாய்பிளந்த தேவாதிதேவனை]இப்போது ஆண்டாள் நோற்பதுபோல் நம்மாழ்வாரும் ஒரு திருவாய்மொழியில் நோன்பு நோற்றார்;வீற்றிருந்தேழுலகும் என்ற திருவாய்மொழியில் ஏற்ற நோற்றேற்கு..என்று முதலிலும் "வண்டமிழ்நூற்க நோற்றேன்' என்று முடிவிலும் வருவது காண்க. அங்ஙனம் நோற்ற திருவாய்மொழியில் தேவாதிதேவனை அநுபவிக்கின்ற ஆழ்வார் மாவாய் பிளந்தானென்ற விசேஷணத்தையே முதற் பாட்டில் இட்டருளினர்;"வெம்மாபிளந்தான் தன்னை' என்றது காண்க, ப்ரதமப்ரபந்தத்தில் "இமையோர் தலைவா!" என்றும்;சரமப்ரபந்தத்தில் "அயர்வறுமமரர்களதிபதி 'என்றும் தேவாதி தேவனையேமுந்துறமுன்னம் சேவித்தாராழ்வார். [சென்று நாம் சேவித்தால்] "வானநாயகனே! அடியேன் தொழவந்தருளே" என்று தேவாதி தேவனை நீர் உம்மிடம் வருமாறு அழைத்தீர்;அங்ஙனமவலாமல் அவனிடம் நாம் சென்று சேவிக்கலாம் வாரும் என்றழைக்கிறாள் போலும் [ஆவாவென்று]',ஆவாவென விரங்கார் அந்தோ வலிதே கொல்,மாவாய் பிளந்தார் மனம்"என்றும், "அடியேற்கு ஆவாவென்னாயே" என்றும் நீர் விரும்பினபடியே மாவாய்பிளந்த பெருமான் உமக்கு ஆவாவென்பன் என்று காட்டுகிறபடி, [ஆராய்ந்து] "ஆரென்னையாராய்வார்" என்ற உம்முடைய குறையும் தீரும் என்று காட்டியபடி. ••• ••• (8)

9. தூமணிமாடத்து (திருமழிசைப்பிரான்)

நம்மாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான திருமழிசைப்பிரானை யுணர்த்தும் பாசுரமிது. இதில் மாமான் மகளே! என்ற விளி ஒருவகையான தேஹஸம்பந்தத்தில் நோக்குடையது, ஆண்டாளுக்கும் திருமழிசை யாழ்வார்க்கும் ஒருவகையான தேஹஸம்பந்தமுண்டு; அதாவது வேதாந்த தேசிகன் கோதாஸ்துதியில் "கமலாமிவாந்யாம் கோதாம்" என்றும் "ஸந்த: பயோதி துஹிதுஸ் ஸஹஜாம் விதுஸ் த்வாம்" என்றும் அருளிச் செய்தபடியே ஆண்டாள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியானவள். "பார்க்கவீ லோகஜநநீ க்ஷீரஸாகரஸம்பவா" என்ற அமரகோசத்தின் படியும் இதிஹாஸ புராண வரலாற்றின்படியும் லக்ஷ்மி (ஆண்டாள்) ப்ருகு குலத்தில், திருமழிசைப்பிரானும் ப்ருகு குலத்தில் தோன்றியவரென்பது சரித்திரஸித்தம் இத்தகைய ஸமான குலஸம்பந்தம் இங்கு நோக்கத்தக்கது. ரிஷி குலத்திலே பிறந்து பிரம்பன் குடியிலே

acharya.org

யானார் அவர். ப்ராஹ்மண குலத்திலே பிறந்து கோபாலர் குலத்திலேயானாள் இவள். இதுவும் ஒற்றுமை நயம். [தூமணி மாடத்து] சிறந்த மாணிக்கக் குப்பியினுள்ளேயுள்ளது வெளியில் நிழலிட்டுத் தோன்றும் திருமழிசைப்பிரான் "உட்கிடந்தவண்ணமே புறம் பொசிந்து காட்டிடே" என்று வேண்டிக்கொண்டபடியே உள்ளிருந்த திருமால் அப்படியே வெளியிற் பொசிந்து காட்சி தந்தமையால் இவர் தூமணிமாட மென்னத் தகுதியுடையார். [சுற்றும் விளக்கெரிய] விளக்காவது ஞானவொளி. "சாக்கியங் கற்றோம் சமண்கற்றோம் சங்கரனாராக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம்" என்றபடி இவ்வாழ்வார் ஸகல மதங்களிலும் புக்கு ஸர்வதோமுகமான ஞான விளக்கம் பெற்றவராதலால் சுற்றும் விளக்கெரிதல் இவர்க்கு அஸாதாரணம் "யானறிந்தவாறு—ஆரறிவார்" என்றும் "என் மதிக்கு விண்ணெல்லா முண்டோ விலை" என்றும் இவரது பாசுரங்களினாலும் இது ஸித்தம் [தூபம் கமழ] சிறந்த ஞானமிருந்தால் மாத்திரம் பயன்படாது. அது நன்கு பரிமளிக்கவேண்டும். எம்பெருமானை யன்றி வேறொரு தெய்வத்தைத் தொழாதிருத்தலே ஞானத்திற்குப் பரிமளம் "மறந்தும்புறந் தொழா மாந்தர்" என்றது காண்க. இவ்வாழ்வாருடைய திருக்கண் செல்வது சயனத்திருக்கோல மான எம்பெருமான்களின்மீதுதான். கச்சி வெஃகாவிலும் திருக்குடந்தையிலுமே பெரும் பாலும் இவர் காலம் கழித்தது. சயனத்திருப்பதிகளையே ஒரு கோர்வையாக வெடுத்து பாசுரம் பாடினவரும் இவ்வாழ்வார்; "நாகத்தணைக் குடந்தை வெஃகாத்-திருவெவ்வுள் நாகத்தணையரங் கம் பேர் அன்பில்—நாகத்தணைப் பாற்கடல் கிடக்குமாதி நெடுமால், அணைப்பார் கருத்தனாவான்' என்றது காண்க. [துயிலணை மேல் கண்வளரும் மாமான் மகளே!] மகள் என்றதனால் விதேயத் வம் சொன்னபடி. மகள் சொற்படி தந்தை கேட்பதும் தந்தை சொற்படி மகள் கேட்பதும் வழக்கம். மாமான் என்றது. மஹா மஹான் என்றபடி. துயிலணை மேல் கண்வளரும் மாமான் யதோக்தகாரி யெம்பெருமான்; அப்பெருமாள் இவ்வாழ்வார் சொற்படி கேட்டவர் கணிகண்ணன் போகின்றான்—நீயுமுன்றன் பைந் நாகப் பாய் சுருட்டிக் கொள்' என்ற போது அப்படியே சுருட்டிக்கொண்டு புறப்பட்டார்; "உன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள்' என்ற போதும் அப்படியே. இனி, துயிலணைமேற் கண்வளரும் மாமான்—ஆராவமுதன்; அப் பெருமானும் "எழுந்திருந்து பேசுவாழி கேசனே" என்ற இவ்வாழ்வாரது வேண்டுகோளின்படி எழுந்திருந்தவர் என்பது பிரஸித்தம் [உன் மகள் தான் ஊமையோ] வாய்திறவாமலே ஹஸ்த சேஷ்டை முதலியவற்றால் காரியம் செய்வது ஊமைகளின் பணி; இவ்வாழ்வாரும் யாத்திரை யடைவில் பெரும்புலியூரென்னும் கிராமத்தில் ஒருவேதியன் வீட்டுவாசல் திண்ணையில சிறிது பொழுது எழுந்தருளியிருக்க அங்கு வேதமோதிக்கொண்டிருந்த அந்தணர்கள் நீறுபூத்த நெருப்புப்போலுள்ள ஆழ்வாருடைய மஹிமையைத் தெரிந்துகொள்ளாமல் அவரைக் கீழ்ச்சாதி யராகவெண்ணி வேதாத்யயனம் அவருடைய காதிற்படலாகாது என்று கருதி ஓதுதல் தவிர்ந் திருக்க, அக்குறிப்பை யறிந்த ஆழ்வார் அவ்விடத்தைவிட்டுத் தூரத்திற்சென்று வேறோரகத்து மேடையில்வீற்றிருக்கையில் அந்தவேதியர்கள், மீண்டும்வேதமோதத்தொடங்கி விட்டவாக்கியம் தோன்றாது மயங்கி நிற்க, ஆழ்வார் அது கண்டு கறுப்பு நெற்களைக் கையுகிராலே இடந்துபோட அப்பொருளுள்ள வேதவாக்கியம் அவர்கட்குத் தோன்றிற்று; அதாவது "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்பிந்நம்" என்பது; உடனே அவர்கள் ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளால் இவரை உபசாந்து க்ருதார்த்தராயினர் என்பது சரித்திர வரலாறு. இங்ஙனமாக வாய்திறவாமலே இங்கிதத்தினால் காட்டினதுபற்றி ஊமையோ என்றது. சொன்ன சொற்களைச் செவியேற் காதவர் செவிடர்: அந்தச் செவிடும் இவரது சரிதையில் ப்ரஸித்தம்; முன்சொன்ன பெரும்புலி யூரில் அந்தணரடிகள் யாகஞ் செய்துகொண்டிருந்த விடத்தில் இவ்வாழ்வாரை எழுந்தருள் வித்துக்கொண்டு போய்ச் சில மஹான்கள் இவர்க்கு அக்ர பூஜை செய்விக்க, அப்போது அங்கிருந்த பல சிசுபாலஜ்ஞாதிகள் எண்ணிறந்த வசைமொழிகளை வர்ஷிக்க, அவற்றை

acharya.org

இவ்வாழ்வார் செவியேற்காதிருந்தனர் என்ற வரலாறு காண்க. [அனந்தலோ] தூக்கமோ என்றபடி. பரமைகாந்திகட்குத் தூக்கமாவது பாஹ்ய விஷயங்களிற் சிறிதும் நெஞ்சு செல்லாதிருக்கப் பெறுகலே. "உன்னைத் தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும்பூசித்தும் போக்கினேன்போது" என்றும் "தொழிலெனக்குத்தொல்லைமால் தன்னாமமேத்தப் பொழுதெனக்கு மற்றதுவே போதும்' என்று மருளிச் செய்யு மிவ்வாழ்வார்க்கு இந்த நிலைமையே அனந்தலாகும் [ஏமப்பெருந்துயில் மந்திரப் பட்டானோ] மற்றையாழ்வார்களிற் காட்டிலும் இவ்வாழ்வாருடைய பரமைகாந்தித்வம் மிக விலக்ஷணம் என்பது இங்கு அறியத் தக்கது. "பிறிரு மனமிலேன் பிஞ்ஞகன்றன்னோடெதிர்வன். அவனெனக்கு நேரான்' என்னும் படியான திருநாவீறு இவர்க்கே அஸாதாரணமன்றோ; இதுதான் பெருந்துயில்; எம்பெருமானை யொழிந்த மற்றையோரைக் கண்கொண்டு பாராமையிற் பெருமை இவர் மந்திரப்பட்டது பேயாழ்வார் பக்கலில் [மாமாயன்] "மாயமென்ன மாயமே" என்றும், மாயமாய மாக்கினாய் உன் மாயமுற்று மாயமே" என்றும் பலகாலும் எம்பெருமானது மாமாயங்களைப் பேசுகிறவர் இவ்வாழ்வார். [மாதவன்] "மாதவனை ஏத்தாதார் ஈனவரே' என்றவரும் இவ்வாழ்வாரே; "திருவில்லாத்தேவரைத் தேறேன்மின் தேவு" என்றதுங்காணலாம். [வைகுந்தன்] "வைகுந்தச் செல்வனார் சேவடிமேல் பாட்டு' என்றவர் இவ்வாழ்வாரே. வைகுந்தனது சேவடிமேல் தாம் பாசுரம் பாடினதாகச் சொல்லிக்கொண்டார் ஆகவே, மாமாயன், மாதவன், வைகுந்தனென்ற திருநாமங்கள் இவ்வாழ்வார்க்குப் பரமபோக்யங்களென்பது ஸூசிதம். ... (9)

10 நோற்றுச்சுவர்க்கம் [பேயாழ்வார்]

திருமழிசை யாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான பேயாழ்வாரை யுணர்த்தும் பசுரமிது. ஓடித்திரியும் யோகிகளாய் ஒருவரோடு ஒருவர் சேராமல் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த பொய்கையார் பூதத்தார் பேயார் இம் மூவரையும் ஒன்று சேர்த்து அநுபவிக்கக் கருதிய எம்பெருமான் ஒரு பெருமழையை வியாஜமாக்கித் திருக்கோவலிடைகழியில் நெருங்கி யநுபவித்தானென்பது வரலாற்றின் சுருக்கம். இப்பேயாழ்வாரைப் பற்றித் திருவரங்கத்தமுதனார் நூற்றந்தாதியில் அருளிச் செய்யுமிடத்து "மன்னிய பேரிருள் மாண்ட பின் கோவலுள் மாமலராள் தன்னோடு மாயனைக்கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்" என்றார் பொய்கையாரும் பூதத்தாரும் இருவிளக்கேற்றியிருளையகற்ற, இவ்வாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கிப் பலாநுபவம் செய்தருளினார் என்பர் ஆன்றோர். அவ்வர்த்தமே யிங்கு முதலடியிற் றொலியும். நோற்று—மற்றையிரண்டு ஆழ்வார்களும் விளக்கேற்றுகையாகிற உபாயாநுஷ்டானஞ் செய்யவே என்றபடி, சுவர்க்கமாவது ஆனந்தாநுபவம். "யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா" என்ற ஸ்ரீராமாயணத்தில் பிராட்டி அருளிச் செய்ததுங் காண்க. "வாசல் திறவாதார்" என்றது பேயாழ்வார்க்கு மிகவும் பொருத்தமான விங்கம். திருக்கோவலிடைகழியில் பொய்கையார் முன்னே புகுந்து தாளிட்டுக் கொண்டார்; பிறகு பூதத்தார் வந்து சேர அவர்க்கு அப்பொய்கையார் வாசல் திறந்தார். பிறகு வந்து சேர்ந்த பேயார்க்குப் பூதத்தார் வாசல் திறந்தார். இப்பேயார்க்குப் பிறகு ஒருவரும் வந்து புகாமையினால் வாசல் திறக்கவேண்டிற்றில்லை. ஆகவே வாசல் திறவாதார் என்றது பேயாழ்வார்க்கு மிகப்பொருத்தமாக அமைந்த குறிப்பு. [நாற்றத் துழாய்முடி நாராயணன்] இவ்வாழ்வாருடைய பாசுரங்கள் திருத்துழாய் மயமாகவேயிருக்கும். ஊதிருக்கண்டேனுக்கு அடுத்த பாசுரம் "பொன்தோய்வரை மார்பில் பூந்துழாய்" என்பது. அதற்கடுத்த பாசுரம் 'மலராள் தனத்துள்ளான் தண்டுழாய் மார்வன்" என்பது. முடிவுபாசுரத்திலும் "தண்டுழாய்த்தார் வாழ் வரை மார்பன்" என்றார். இடையிலும் பல பாசுரங்கள் காண்க. ஒன்பதாவது பாசுரத்தில்

acharya.org

[நாமம் பல சொல்லி-யென்பதில்]நாராயணனையும் திருத்துழாயையும் கண்ணனையும் சேர்த்துப் பாடினார் பேயார். இதுவும் ஒரு சிறந்த பொருத்தம். "காண்காணென விரும்பும் கண்கள்" என்று ஒரு நொடிப்பொழுதும் கண்மூடி யிருக்க மாட்டாமையைச் சொல்லிக்கொண்ட நீர் கும்பகர்ணனுக்கும் மேலாக இன்னமும் துயில் கொள்ளல் தகுதியோ என்கிறாள் பண்டொருநா ளென்று தொடங்கி. இப்பாட்டில் நட்ட நடுவில் இராமபிரானுடைய திவ்யசரித்திரமொன்றை ஆண்டாள் அமைத்தது பேயாழ்வாருடைய திருவந்தாதியில் நட்ட நடுவில் "அவனே – இலங்கா புரமெரித்தானெய்து" என்றும் "எய்கதுவும் தென்னிலங்கைக் கோன்வீழ" என்றும் அருளிச் செய்கைக்கு நன்கு ஒக்கும். திருமழிசையாழ்வாரை யுணர்த்தின கீழ்ப்பாட்டில் அனந்தலோ என்று வெறும் அனந்தலே சொல்லிற்று. இப்பாட்டில் ஆற்றவனந்தலுடையாய்! என்கிறது— மழிசையர்கோனுக்கும் இவ்வாழ்வார் ஆசாரியராதலால் அனந்தல் என்று ஹேயமான உறக்க மன்று சொல்லுகிறது "உரோவிந்யஸ்த ஹஸ்தாஸ் தே நித்ராயந்தே ஸூரிப்பரா:" அனந்தல் அதிகமாயிற்று என்று பகவச் சாஸ்திரங்களில் கொண்டாடப்பட்ட 'அனந்தல்' பரமைகாந்தித்வ ஸீமாபூமியைக் காட்டுமது. [அருங்கலமே!] எம்பெருமானது திருவருளை மிக அருமையாகப் பெற்ற ஸத்பாத்ரமே! என்றபடி. பாசுரம் தொடங்கும்போதே "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று ஆனந்தமாகத்தொடங்கப்பெற்ற பகவத் பரமக்ருபாபாத்ரபூதர் மற்றொரு ஆழ்வாரில்லையே. [தேற்றமாய் வந்து திற] உம்முடைய திருநாமமோ பேயார்; பேய்த்தனமாக வாராமல் தேறி வந்து திறவும் என்கிறாள் போலும் ... (10)

11 கற்றுக்கறவை [பூதத்தாழ்வார்]

பேயார்க்கு அடுத்த முன்னவரான பூதத்தாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில் "குற்ற மொன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!" என்ற விளி பூதத்தார்க்கு நன்கு பொருந்தும். பல பொருள்களையுடையதான கோ என்னும்சொல் கோதா என்றவிடத்திற்போல ஸ்ரீஸூக்தியைச் சொல்லுகிறதிங்கு. கோவலர்—ஸ்ரீ ஸூக்திகளை யருளவல்லவர்களான ஆழ்வார்கள். "குற்றமொன்றில்லாத" என்ற விசேடணம் முதலாழ்வார்கள்—மூவர்க்கே பொருந்தும்; யோனிஜத்வமாகிற வொரு குற்றம் மற்றை யாழ்வார்களுக்குண்டு; அக்குற்றமொன்றும் இல்லாத கோவலர்—முதலாழ்வார்கள்; அவர்களுள் பொற்கொடியே—"கோல்தேடி யோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடி யோடும் மனம்" என்கிற பாசுரத்தினால் தம்மைக் கொடியாகச் சொல்லிக் கொண்டவர் பூதத்தாழ்வாரே யாவர், எம்பெருமானாகிற உபக்கத்தைத் தேடிச் செல்லு கின்ற கொடி போல்வன் நான் என்றவர் இவரேயிறே. கற்றுக்கறவைக் கணங்கள் பல கறந்து' என்பது முதலாழ்வார் மூவர்க்கும் பொதுவான வாசகம். கற்றுக்கறவை— கன்றாகிய கறவை. (கறவை யென்பதனால் ஸ்ரீ ஸூக்தி விவக்ஷிதம்) மற்றை யாழ்வார்கள் பெரிய பெரிய பாசுரங்களை யளித்தார்கள். முதலாழ்வார்கள் அங்ஙனன்றிக்கே வெண்பாவாகிய மிகச்சிறிய பாசுரங்களை யளித்தார்கள். பொய்கையாழ்வாரருளிய திருவந்தாதி கறவைக்கணம்; பூதத்தாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக்கணங்கள்; பேயாழ்வார் திருவந்தாதியும் சேர்ந்து கறவைக் கணங்கள் பல. க்ரமேண ஏகவசந த்விவசந பஹுவசநங்கள் இணங்கின அழகு காண்க [செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்] தேசமெங்கும் திரிந்து பகவத் விரோதிகளை நிரஸிக்க வேணுமென்கிற அர்த்தத்தை "எண்டிசையும் பேர்த்தகரம் நான்குடையான் பேரோதிப் பேதைகாள்! தீர்த்தகரராமின் திரிந்து" என்ற பாசுரத்தினால் வெளியிட்டவர் இவ்வாழ்வாரே. "புற்றரவல்குல்" என்பது இடையழகை வருணிப்பதாகும். ஸ்வாபதேசத்தில் இடையழகாவது பக்தியின் பெருமை. ஞானம் பக்தி விரக்தி என்ற மூன்றில் பக்தியானது இடைப்பட்டதாதலால் இடையழகென்பது பக்தியின் அழகேயாகும். இவ்வாழ்வார் தம்முடைய திருவந்தாதியை முடிக்குமிடத்து "என்றனளவன்றால் யானுடையவன்பு' என்றே முடித்தார்.

acharya.org

இதனால் இவரது இடையழகு நன்கு வெளிப்பட்டதாயிற்று. அன்பிலே தொடங்கி அன்பிலே தலைக்கட்டினார் புனமயிலே! என்றவிளியும் இவர்க்கு அழகாகப் பொருந்தும். பொழிலிடத்தே வாழும் மயில்; இவ்வாழ்வார் தோன்றிய தலமோ திருக்கடல்மல்லை; அதனைப்பாடின கலியன் "கடி பொழில்சூழ் கடல் மல்லை" என்றே பன்முறையும் பாடினர். மயில் மேகத்தைக் காண்பதிலே மிக்க குதூஹல முடைத்தாதலால், மேகம் நீர்பருக வருமிடமான கடற்கரையிலே மயில்கள் மகிழ்ந்து நிற்கும் இவ்வாழ்வார் நின்றவிடமும் கடற் கரையிலேயிறே சுற்றத்துத் தோழிமாரித்.யாதி] இவர்க்குப் பொய்கையாரும் பேயாரும் சுற்றத்தவர்கள்; மற்றையாழ்வார்கள் தோழிமார். [முகில் வண்ணன் பேர்பாட]முந்துற முன்னம்முகில் வண்ணன்பேர் பாடினவர் இவ்வாழ்வாரே யாவர்; "உலகேழும் முற்றும் விழுங்கும்முகில்வண்ணன் ... ஏத்துமென்னெஞ்சு" என்ற இவர் பாசுரம் காண்க. புனமயில் முகில்வண்ணனைத் தானே பாடும் இப்பாட்டில் கோவலர் என்று திருக்கோவலூரை ஸூசிப்பித்தது மிக முக்கியம். ... ... (11)

12 கனைத்திளங் கற்றெருமை. (பொய்கையாழ்வார்)

பூதத்தாழ்வாருக்கு அடுத்த முந்தினவரான பொய்கை யாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. தங்காய்! என்ற விளி இவர்க்கு நன்கு பொருந்தும். உலகில் தங்கையென்று ஸ்ரீ மஹாலக்ஷ்மியையும் தமக்கையென்று மூதேவியையும் வழங்குவர்கள். 'சேட்டை தம்மடியகத்து' என்ற திருமாலைப் பாசுரத்தில், தமக்கைக்கு வாசகமான ஜ்யேஷ்டா என்ற சொல்லால் மூதேவியைக் குறித்தமை காண்க. ஸ்ரீமஹாலக்ஷ்மி தாமரை மலரிற் பிறந்தவள். 'வனசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே' என்கிறபடியே பொய்கையாழ்வாரும் தாமரைப்பூவில் தோன்றியவர். இந்த வொற்றுமை நயம்பற்றித் தங்காய்! என விளிக்கத் தகுதியுடையாரிவ்வாழ்வார். "நனைத்தில்லஞ் சேறாக்கும்' என்ற விசேடணமும் இவர்க்கு வெகு நேர்த்தியாகப் பொருந்தும். ராவணவதாநந்தரம் திருவயோத்திக்கு மீண்டு எழுந்தருளா நின்ற பெருமானை நோக்கி பரத்வாஜமஹர்ஷி "பங்க திக்தஸ்து ஜடிலோ பரதஸ் த்வாம் ப்ரதீக்ஷதே" என்றார். இங்கு பரதாழ்வான் சேறு பூசப் பெற்றிருப்பதாகச் சொல்லப்பட்டதன் கருத்துயாது? இரவும் பகலும் நிச்சலும் அழுதழுது நனைத்தில்லம் சேறாக்கினன் என்றபடி "வண்பொன்னிப் பேராறுபோல் வருங் கண்ண நீர்கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர்" என்றார் குலசேகரப் பெருமாளும். அவ்வண்ணமாகவே பொய்கையாழ்வாரும் "பழுதே பல பகலும் போயினவென்று அஞ்சியழுதேன்" என்று தாமே பேசினபடியே அழுதவராதலால் நனைத்தில்லஞ் சேறாக்கினரென்க அன்றியும் இவரது இல்லமான பொய்கை சேறாகவேயுளது. [கனைத்து] 'முதன் முதலாகப் பேசத் தொடங்கும் போது கனைப்பது இயல்பு பொய்கையார்க்கு முன்னம் பேசினவர்கள் யாருமில்லை. இவரே முதன் முதலாகப் பேசத் தொடங்கினவரென்பது இவ்வினையெச்சத்தினால் தோற்றுவிக்கப்படும். [இளங்கற்றெருமை] எருமை யென்றால் மஹிஷீ; லக்ஷித லக்ஷணாக்ரமத்தால் தேவ தேவ திவ்ய மஹிஷீ என்றவாறு எம்பெருமானுக்கு திவ்ய மஹிஷியான பிராட்டியை யொப்பவர் இவ்வாழ்வார் என்பது ஸூசனை. "இளங்கன்றுகளையுடைய" என்று விசேஷணமிட்டதனால், மற்றையாழ்வார்களனைவரும் இவர்க்கு வத்ஸ ஸ்தாநீயர்களாய் இவர் மாத்ரு ஸ்தாநீயர் என்று காட்டினபடி. ஆழ்வார்களுள் முதல்வரிறேயிவர். [கன்றுக்கிரங்கி] இவர் ஸ்ரீ ஸூக்தி யருளிச் செய்யத் தொடங்கினது கன்றுகளான நம்போல்வார் பக்கலிலுள்ள பரமக்ருபையாலென்க. "வையத்தடியவர்கள் வாழ' என்ற தனியன் காண்க. [நினைத்து முலைவழியே நின்று பால்சோர] பகவத்குணங்களை நினைத்த வாறே அந்த நினைவு தானே ஊற்றுகப்பால் போன்ற ஸ்ரீஸூக்திகளாகப் பெருகப்புக்கன என்ற படி [பனித்தலைவீழ நின்வாசல் கடைபற்றி] இவர் பொய்கையில் தோன்றினவராதலால்

acharya.org

இவரது வாசற்கடையைப் பற்றுவார்க்குப் பனித்தலைவீழ ப்ராப்தமே யாகுமிறே. முதலாழ்வார்கள் மூவரும் பனித்தலைவீழத் திருக்கோவலூர் வாசற்கடையைப்பற்றின கதையும் நன்கு ஸூசிதமாகிறது. [சினத்தினாலித்யாதி] இது ஸ்ரீராம குணகீர்த்தனம். மஹர்ஷிகளின் ஞானக் கண்ணுக்கு இலக்காகாதவொரு ஸ்ரீராம சரிதம் இவ்வாழ்வாருடைய அகக்கண்ணுக்கு இலக்கானமை "பூமேய மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியைப், பாதமத்தாலெண்ணினான் பண்பு" என்ற இவரது பாசுரத்திற் பொலியும். அதில் "நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே! என்றதற்குப்பொருந்த 'மனத்துக்கினியானை" என்றாள் [இனித்தானெழுந்திராய்] "பழுதே பல பகலும்' என்கிற பாசுரம் பேசினபிறகுங்கூட உறங்கலாமோ? என்கை. முமுக்ஷுப்படியில் "பழுதே பல பகலும் போயினவென்று இழந்த நாளைக்குக் கூப்பிடுகிறவனுக்கு உறங்க விரகில்லை" என்ற ஸ்ரீஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம். [அனைத்தில்லத்தாரு மறிந்து] "அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்" என்ற இவ்வாழ்வார் பாசுரம் நினைப்பூட்டினபடி இப்பாசுரத்தோடு ஆண்டாளுக்கு முந்தின ஆழ்வார்களை யெல்லாம் உணர்த்திற்றாயிற்று. "ஆழ்வார்கள் பன்னிருவர்" என்றுமுள்ள ஸம்ப்ரதாயப்படிக்கு ஸ்ரீ மதுர கவிகளும் ஆண்டாளும் ஆழ்வார் கோஷ்டியில் சேர்ந்தவர்களாதலால் இவ்விருவரையு முணர்த்துவதும் இப்பாட்டிலேயே அறியக்கிடக்கிறது. எங்ஙனே யென்னில்; நற்செல்வன் தங்காய்! என்றது நற்செல்வன் தங்கையே! என்று பொருள்படுதலால் நற்செல்வன் தன்னுடைய கையாக இருப்பவரே! என்றபடியாகும். இங்கு நற்செல்வனென்பது நம்மாழ்வாரை. அவர் திருவாய்மொழி அருளிச் செய்கையில் மதுரகவிகள் அவருடைய கையின் ஸ்தாநீயராயிருந்து பட்டோலை கொண்டாராதலால் இந்த விளி மதுரகவிகட்குப் பொருந்தும்.

இனி நற்செல்வனென்று எம்பெருமானைச் சொல்லிற்றாகி அவருடைய தங்கையென்று ஆண்டாளையுஞ் சொல்லக் குறையில்லை. "கோதற்ற ஞானத் திருப்பாவை பாடிய பாவை தங்கை" என்றும், "பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே" என்றுமுள்ளவை காண்க. ஆண்டாள் தன்னைத்தானே உணர்த்திக் கொள்ளுகை பொருந்துமோ வென்று விரஸமாக வினவுவார்க்கு நாம் விடையளிக்க வல்லோமல்லோம். சொற்சுவை அமைந்திருக்கு மழகை அநுபவித்துப் போருகிறோமத்தனை. ... — (12)

13. புள்ளின்வாய் கீண்டானை (தொண்டரடிப் பொடியாழ்வார்)

இது ஆண்டாளுக்கு அடுத்த தொண்டரடிப்பொடி யாழ்வாரை யுணர்த்தும் பாசுரம். [போது அரிக் கண்ணினாய்!] புஷ்பங்களை ஹரிப்பதிலேயே த்ருஷ்டியைச் செலுத்துபவரே! என்றபடி. புஷ்ப கைங்கரிய பரரிறே இவ்வாழ்வார். "துளவத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி" "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றவை காண்க. பாவாய்! என்ற விளியும் இவர்க்கு நன்கு பொருந்தும். பதிவ்ரதா சிரோமணியைப் பாவையென்பர். இவ்வாழ்வார் அரங்கனொருவனுக்கே வாழ்க்கைப்பட்டு வேறொரு திருப்பதி யெம்பெருமானை நெஞ்சிலும் நினையாதவராதலால் கற்புச் சிறப்பு குறிக்கொள்ளத்தக்கது. திருவேங்கடமுடையானை திரே ஒருவர் 'பதின்மர் பாடும் பெருமாள்!" என்று ஏத்த, அதைக்கேட்ட பெரிய கேள்விஜீயர், 'சோழியன் கெடுத்தான் காணும்: அந்த ஏற்றம் நம் பெருமாளுக்கில்லையே; நம்பெருமாளொருவர்க்கே' என்றார் என்ற ஐதிஹ்யமும் இங்கு நினைக்கத்தக்கது. [நன்னாளால்] "மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்" என்ற திருவாக்கிலேயே இச்சொல்லும் வருகின்றது. தொண்டரடிப்பொடிகள் திருவவதரித்தது மார்கழித் திங்களேயாதலால் நன்னாளென்னத் தட்டுண்டோ? [கள்ளந் தவிர்ந்து] 'சூதனாய்க் கள்வனாகி' என்றும் 'கள்ளமே காதல் செய்து' 'கள்ளத்தேனானுந்

acharya.org

தொண்டாய்' என்றும் பலகாலும் தமது கள்ளத்தைப் பேசிக்கொண்டாரிவ்வாழ்வார். இவரது சரிதையிலும் பொன்வட்டில் விஷயமான கள்ளம் அடிபட்டுக் கிடக்கிறது. அது தவிர்ந்து பகவத் பாகவத கோஷ்டியில் கலந்த படியை ஈற்றடி தெரிவிக்கின்றது. பெரியாழ்வார் போலவே இவ்வாழ்வாரும் பெரும்பாலும் பூம்பொழில்வாஸ முடையவராதலால் அவ்விடத்து அடையாளமாகப் புள்ளும் சிலம்பினகாண் என்பது இப்பாட்டிலும் புகுந்தது. [குள்ளக் குளிரவித்யாதி] நீராட்டம் முதலிய நித்ய கர்மா நுஷ்டானங்களையும் தவிர்ந்து சிலகாலம் பள்ளிக்கிடந்தமை இவ்வாழ்வாரது சரிதையிற் காணத்தக்கது புள்ளின்வாய் கீண்டானை யென்று தொடங்கிக் கண்ணபிரானுடையவும் இராமபிரானுடையவும் கீர்த்திமை பாடினபடி சொல்லுகிறது இவ்வாழ்வார் திருமாலையின் முடிவில் 'வள வெழுந்தவளமாட மதுரைமா நகரந்தன்னுள், கவளமால் யானை கொன்ற கண்ணனை யரங்கமாலை' என்று கண்ணபிரானுடைய கீர்த்திமையையும், திருப்பள்ளி யெழுச்சியில் 'மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தி யெம்மரசே யரங்கத்தம்மா, என்று இராமபிரானுடைய கீர்த்தியையும் பாடினமையுணர்க. 'பிள்ளைகளெல்லாரும்' என்றது ஆண்டாள் தனக்கு முந்தின ஆழ்வார்களெல்லாரையும் சொன்னபடி. — — — — — — (13)

14. உங்கள் புழைக்கடை. (திருப்பாணாழ்வார்)

தொண்டரடிப் பொடிகளுக்கு அடுத்த திருப்பாணாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது. இதில் நங்காய்! நாணாதாய்! நாவுடையாய்! என்ற மூன்று விளிகளும் பாண்பெருமாளுக்கு நன்கு பொருந்தும். நங்கை யென்பது குணபூர்த்தியைச் சொல்லுகிறது. லோக ஸாரங்க மஹாமுனிகள் வந்து என் தோளின்மீது ஏறிக்கொள்ளுமென்ன, அத்யந்த பாரதந்திரிய ஸ்வரூபத்தை நினைத்து அதற்கு உடன்பட்டமை குணபூர்த்தி. அங்ஙனம் அந்தணர் தலைவரது தோளின்மீது ஏறியிருக்கச் செய்தேயும் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன் என்றே பேசினவராதலால் நாணாதவர். (நாண்—அஹங்காரம்) 'பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுமின்கள்' என்று தேசிகன் பணித்தபடி ஸகல வேதார்த்தங்களையும் பத்துப் பாசுரத்திலே அடக்கிப் பேசின பரமசதுரராதலால் நாவுடையார். "கையினார் சுரிசங்கனலாழியர்" என்று சங்கொடு சக்கரமேந்தினவழகை யநுபவித்தமை பற்றியும் "கரியவாகிப் புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்" என்று கண்ணழகில் ஈடுபட்டுப் பேசினமை பற்றியும் "சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணானைப் பாட" என்றான். இவ்வாழ்வார் தமது சாதி நிலைமைக்கு ஏற்ப வாழ்ந்தவிடத்தைக்கருதி உங்கள் புழைக்கடை யித்யாதி அருளிச் செய்யப்பட்டது. இவரது சரிதையில் ஸம்பந்தபட்ட லோக ஸாரங்க மஹாமுனிகளின் தன்மையைக் காட்டுவது போலுள்ளது செங்கற் பொடிக்கூறை யித்யாதி. "எங்களை முன்னமெழுப்புவான் வாய் பேசும் நங்காய்" என்பதில் ஒரு அழகிய பொருள் தொனிக்கும். (அதாவது—) எழுப்புவதாவது—தூக்கிக் கொள்வது. எங்களை என்றது பாகவதர்களை யென்றபடி. பாண்பெருமாளே! உம்முடைய முதற் பாசுரத்தில் 'அடியார்க் கென்னையாட் படுத்தவிமலன்' என்றசொல் நயத்தை நோக்குங்கால் பாகவதர்களை நீர் தோளில் தூக்கிக் கொண்டாடுபவர் போலத் தெரிகின்றது. உமது கதையோ அப்படியில்லை, மஹாபாகவதரான லோகஸாரங்க மஹாமுனியின் தோளின்மீதேறி நீர் இருந்ததாகவுள்ளது. ஆகவே முந்துற முன்னம் பாகவத சேஷத்வத்தை நீர் சொல்லிக்கொண்டது வாய்பேசு மத்தனையே போலும் என்று விநோதமாகக் கூறுகிறபடி. ... ... (14)

15 எல்லேயிளங்கிளியே (திருமங்கையாழ்வார்)

பாண்பெருமாளுக்கு அடுத்தவரும் ஸர்வகநிஷ்டருமான திருமங்கையாழ்வாரை யுணர்த்தும் பாசுரமிது இவ்வாழ்வார் இரண்டு ஆய்ச்சிகளுக்குப் பரஸ்பர ஸம்வாதமாக *மானமரு மென்னோக்கி* என்றொரு பதிகம் அருளிச்செய்தவராதலால் இவரை யுணர்த்தும் பாசுரம் பரஸ்பர ஸம்வாத ரூபமாகவே அமைக்கப்பட்டது. 'கிளிபோல் மிழற்றி நடந்து'' *மென்கிளி போல் மிக மிழற்று மென்பேதையே* என்று பல பாசுரங்களில் இவர் தம்மைக் கிளியாகச் சொல்லிக்கொண்டவராதலால் கிளியே! என்ற விளி இவர்க்குப் பொருந்தும்; அன்றியும், சொல்லிற்றையே சொல்லுவது கிளியின் இயல்பு. அதுபோல இவர் ''மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற'' என்றபடி நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை யநுசரித்தே அருளிச்செய்பவராதலாலும் கிளியென்றது இரண்டாமடி திருமங்கையாழ்வாருடைய விடையளிப்பு. [வல்லையுன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்] இது கலியனை நோக்கி ஆண்டாள் கூறுமது, 'வாசிவல்லீரிந்தளூரீர்! வாழ்ந்தேபோம் நீரே' என்று நீர் மிகக் கடினமாகப் பேசவல்லீரென்பது எனக்கு. [பண்டே—நீர் அவதரித்துப் பாசுரம் பேசுவதற்கு முன்னமே] தெரியுங்காணும் என்றாள், அது கேட்ட கலியன் வல்லீர்கள் நீங்களே—'கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே' என்று அறவெட்டிதாகச் சொன்ன உன் பேச்சு கடினமா? என் பேச்சு கடினமா? நீயே பார்க்கலாம்—என்றார், என்றவுடனே *நண்ணுதவாள வுணர்* *கண்சோர வெங்குருதி* முதலிய திருமொழிகளில் தாம் அநுஸந்தித்த பாகவத சேஷத்வகாஷ்டையை நினைத்து *நானே தானாயிடுக* என்றார். ''உனக்கென்ன வேறுடையை'' என்றது திருமங்கையாழ்வார்க்கு அஸாதாரணமான திருமடல் திவ்யப்ரபந்த வக்த்ருத்வத்தை யுளப்படுத்தியதாகும். [எல்லாரும் போந்தாரோ இத்யாத] கலியனுக்கு முன்னமே மற்றுமுள்ள ஆழ்வார்கள் அவதரித்து, பன்னிருவர் என்கிற ஸங்கியை இவரோடு நிரம்பிற்றன்றோ, [வல் ஆனை கொன்றானை—மாயனைப் பாட] ஆனையைக் கொன்ற விஷயத்தை ஒரு ஆச்சரியமாக எடுத்துப் பேசினவர் கலியன். ''ஆவரிவை செய்தறிவார் அஞ்சன மாமலை போலே'' என்ற பெரிய திருமொழி காண்க. அடிக்கடி கலியன் வாய்வெருந்தும் வல்லானை கொன்ற வரலாற்றையே; ''கவள யானைகொம் பொசித்த கண்ணனென்னும்' இத்யாதிகள் காண்க [மாற்றாரை மாற்றழிக்க வல்லானை மாயனைப் பாட] எம்பெருமான் தன் திறத்தில் மாறு செய்பவர்களது செருக்கை வெகு ஆச்சர்யமாக அடக்குபவன் என்பதைக் காட்டுகின்ற சரிதைகளுள் கோவர்த்தநோத்தாரண கதை மிகச் சிறந்தது. மாறுசெய்த இந்திரனுக்கு ஒரு தீங்கு மிழைக்காமலே கண்ணன் அவனது கொழுப்பை யடக்கினனிறே. இக்கதையிலே கலியன் மிக்க ஆற்ற முடையவர்; பெரிய திருமொழியை முடிக்கும்போதும் ''குன்றமெடுத்து ஆநிரை காத்தவன் தன்னை'' என்றார்; சரமப் பிரபந்தமாகிய திருநெடுந் தாண்டகத்தை முடிக்கும் போதும் ''குன்றெடுத்த தோளினானை'' என்றே தலைக்கட்டினார். *மாற்றாரை மாற்றழிக்கவல்லா னென்பது பரகாலரான இவர்க்கும் பொருந்தும். ... ... (15)

16 நாயகனாய்நின்ற நந்தகோபாலனுடைய

ஆசார்ய கோஷ்டியில் நடுநாயகமாக நிற்பவர் எம்பெருமானார் என்று சாட்டுகிற படி. ''அமுதா தபர்நாதிசாயி பூம்நா யதிராஜேந நிபந்தநயாகஸ்ரீ ?'' என்ற யதிராஜ ஸப்ததிஸூக்தியும் காண்க. [நந்தகோபன்] எம்பெருமானைப் புத்திரனாகப் பெற்ற விஷயத்தில் எம்பெருமானார்க்கு நந்தகோபனோடு ஸாதர்மியம், யதிராஜ ஸம்பத்குமாரனென

வழங்கப்படுகிற செல்வப்பிள்ளையை க்ருஷ்ணகிசோர ஸ்தானீயனாகக் கொள்க. [உடைய] ஸ்வாமிக்கு உடையவரென்று வழங்குந் திருநாமத்தை ஸூசிப்பித்தபடி. [கோயில்காப்பான்] கோயிலென்கிற சொல் திருவரங்கம் பெரியகோயிலை மட்டும் சொல்லுவதாகவுங் கொள்ளலாம்; மற்றும் பல கோவில்களையும் சொல்லுவதாகவுங் கொள்ளலாம்; மற்றும் பல கோவில்களையும் சொல்லுவதாகக் கொள்ளத்தகும் *தென்னரங்கச் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே* என்றும் *ஸ்ரீமந் ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவாமநுதிநம் ஸம்வர்த்தய* என்றும் சொல்லுகிறபடியே திருவரங்கச் செல்வத்தைக் காத்தருளினவரென்கை. *மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடுநாள்* என்கிறபடியே ஸகல திவ்விய தேசங்களையும் உத்தரிப்பித்தவர் ஸ்வாமியே யாதலால் கோயில்களைக் காத்தருளினவரென்பதும் பொருத்தமே. [கொடித் தோன்றுந் தோரண வாசல் காப்பானே!] *கொடியணி நெடுமதிள் கோபுரம் குறுகினர்* என்றும் நெடுவரைத் தோரணம் நிரைத்தெங்குந் தொழுதனருலகே* என்றும் சொல்லுகிறபடியே கொடியும் தோரணமுமான வாசல் பரமபதவாசல்; அது தன்னையும் ஸ்வாமி யெம்பெருமானார் தம்முடைய ஆளுகையிலே வைத்துக் கொண்டிருப்பவரென்கை. எம்பெருமானார் திருவருளைப் பெறாதவர்களுக்கு அந்த வாசலிற் புகுவது அரிது என்கிற ப்ரஸித்தியைக் காட்டினபடி. [மணிக்கதவம் தாள் திறவாய்] மணியாவது ரத்னம். நவரத்னமென்று சொல்லப்படுவதனால் ஒன்பது ரத்னங்கள் என்று ப்ரஸித்தம். வேதாந்த தீபம், வேதாந்தஸாரம், வேதாந்தஸங்க்ரஹம், கீதாபாஷ்யம், சரணாகதிகத்யம், ஸ்ரீரங்க கத்யம், ஸ்ரீவைகுண்டகத்யம், நித்யம்—என்று ஒன்பது திவ்யக்ரந்தங்களையே இங்கு மணிக்கதவமென்கிறது. கதவு எப்படி பதார்த்தங்களுக்கு ரக்ஷகமோ அப்படியே இந்த திவ்ய க்ரந்தங்களும் மறைப் பொருள்களுக்குச் சேமக்காப்பாக அமைந்தவை யாதலால் கதவென்றது மிகப்பொருத்தம். (கதவு, கதவம் - இவை பர்யாயமே.) இந்த க்ரந்தங்களிலுள்ள பொருள்களை நாங்கள் அநுபவிக்கும்படி செய்தருளவேணுமென்பது தாள் திறவா யென்றதன் கருத்து. "ஆயர் சிறுமியரோமுக்கு மணிக்கதவம் தாள் திறவாய்" என்று அந்வயிப்பது. அறிவிலிகளான எங்களுக்குப் புரியும்படி யருளிச் செய்யவேணு மென்கை. (மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்) எம்பெருமான் தன்னுடைய சாஸ்த்ரங்களிலே முன்னம் தேவரீரைப் பற்றிச் சோதிவாய் திறந்து பணித்துள்ளானென்று கருத்து *கலௌ ராமாநுஜஸ் ஸம்ருத:* *கலௌ கச்சித் பவிஷ்யதி* *உபதேக்ஷ்யநதிதே ஜ்ஞாநிநம் தத்வதர்சிந:* [தூயோமாய் வந்தோம்] *ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே* என்கிறபடியே ஆசாரியர்க்கு மேற்பட தெய்வமில்லை யென்கிற பாவசித்தியோடே வந்திருக்கிறோம் என்கை. தூயோமாக வந்தோம் என்றும் கொள்ளலாம். ஸகலார்த்தங்களையும் நாங்கள் தெரிந்துகொண்டு பவித்திரர்களாம்படி வந்தோமென்றவாறு. [துயிலெழப் பாடுவான் வந்தோம்] *அநாதிமாயயா ஸுப்த:* என்னும்படி அநாதிமாயையினாலே உறங்கிக் கிடக்கிற நாங்கள் அவ்வுறக்கம் விட்டு உணர்ச்சி பெறுவதற்காகவும்.

17 அம்பரமே தண்ணீரே

கொம்பனார்க் கெல்லா மென்று தொடங்கி இரண்டடிகளால்—பகவானைப் பிள்ளையாகப் பெற்ற மாதாக்களுள் மிகச் சிறந்தவளே! என்று சொல்லி யசோதைப் பிராட்டி எழுப்பப்படுகிறாள். "மந்த்ரோ மாதா குரு; பிதா" என்ற பிரமாண வசனத்தின்படி மாதாவாகச் சொல்லுகிறது அஷ்டாக்ஷர மந்த்ரத்தை மாதாவானவள் ப்ரஜையைத் தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டிருப்பது போல மந்த்ரமும் பகவானைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்குமே. பகவானுடைய மாதாக்களுள் யசோதை "ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! நானே

acharya.org

மற்றொருமில்லை'' என்னும்படி சிறப்புற்றது போலத் திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரம் மற்றுள்ள மந்த்ரங்களிற் காட்டில் சிறப்புற்றதன்றோ, முமுக்ஷுப்படியில் ''பகவந் மந்த்ரங்கள்தான் அனேகங்கள்; அவைதான் வ்யாபகங்களென்றும் அவ்யாபகங்களென்றும் இரண்டு வர்க்கம். அவ்யாபகங்களில் வ்யாபகங்கள் மூன்றும் ச்ரேஷ்டங்கள்; இவை மூன்றிலும் வைத்துக் கொண்டு பெரிய திருமந்த்ரம் ப்ரதாநம்'' என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம். இதற்குமேல் ''அம்பரமூடறுத் தோங்கி யுலகளந்த'' இத்யாதியால் திருமந்த்ரார்த்தம் அநுஸந்திக்கப்பட்டதாகிறது எம்பெருமான் ஸர்வ வ்யாபகனென்பதே நாராயண மந்த்ரார்த்த மாதலால் அந்த ஸர்வவ்யாபகத்வமே இங்கு அஸநுந்திக்கப்பட்டதாயிற்று. திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகத்தில் (4) ''மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல்'' என்று திருமந்த்ர ப்ரஸ்தாவம் செய்தவுடனே *ஒண்மிதியிற் புனலுருவி* என்கிற அடுத்த பாசுரத்தினால் திருமந்த்ரார்த்தமான த்ரிவிக்ரமாபதானத்தையேயன்றோ அநுஸந்தித்தது இதற்குமேல் *செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா* இத்யாதியினால் பாகவதோத்தமனை நம்பி மூத்தபிரானை [பலராமனை] யுணர்த்தியது *நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க் கடிமை* என்று திருமங்கையாழ்வார் திருமந்த்ரத்தின் ஸாரார்த்தமாக எடுத்துக் காட்டியருளினது பாகவத சேஷத்வமாகையாலே அதனை ஸூசிப்பித்தபடி. இங்கு *உம்பியும் நீயுமுறங்கேல்* என்று இருவரையும் ஒன்று சேர்த்துச் சொன்னது பகவச் சேஷத்வமும் பாகவத சேஷத்வமும் ஒன்றைவிட்டொன்றுபிரிந்திராதென்கிற தத்துவத்திற்கு ஸ்மாரகமாகும்.

18 உந்துமதகளிற்றன்

[உந்து மதகளிற்றன்] *மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல்* என்ற பொய்கையாழ்வார் பாசுரத்தின்படியே மதயானை போன்ற பஞ்சேந்திரியங்களையும் நொறுக்கித் தள்ளுமவன்—ஜிதேந்திரியன் என்றபடி. [ஓடாத தோள்வலியன்] தோள் என்றது கையென்றபடி; கையாவது ஞானக்கை, வாதிகளையோ பிரதிவாதிகளையோ கண்டு பிற்காலிக்க வேண்டாதே வித்வத் கோஷ்டிகளில் முன்னணியில் நிற்குமாசார்யரைச் சொல்லுகிறது, அன்றியே, அஸ்மதாதிகள் ஸம்ஸார காந்தாரங்களில் ஓட வேண்டாத மிடுக்குடையவர் என்னவுமாம். [நந்தகோபாலன் மருமகள்] எம்பெருமானுக்கு ப்ராண வல்லபர்களா யிருக்கும்படியைச் சொல்லுகிறது. எம்பெருமான் பிராட்டியின் வாக்கை மீறி நடவாதாப் போலே ஆசார்யர்களின் திருவாக்கையும் மீறி நடக்ககில்லானாகையாலே அவனுக்குப் பத்நீஸ்தாநீயர்களாயிருப்பர்களாயிற்று ஆசாரியர்கள். [நப்பின்னாய்] ஏழு ரிஷபங்களாகிற விரோதிகளையழித்துக் கைப்பற்றப் பட்டவள் நப்பின்னை; இவ்வண்ணமாகவே காமக்ரோதலோப மோஹ மத மாத்ஸர்ய அஸூயைகளாகிற பல விரோதிகளின் நிரஸந பூர்வகமாக எம்பெருமானால் கைக்கொள்ளப்பட்டவர் ஆசாரியர்.

[கந்தங் கமழுங்குழலீ] மாதர்கள் *செண்பக மல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சியெண்பகர் பூக்களைக் குழலிலே சூடி நறுமணம் கமழப் பெறுபவர்கள்: ஆசாரியர்கள் *அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்ப மிந்த்ரியநிக்ரஹ, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம் விசேஷத, த்யாநம் புஷ்பம் தப: புஷ்பம் ஜ்ஞாநம் புஷ்பம் ததைவ ச, ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ ப்ரீதிகரம் பவேத்* என்னப்பட்ட புஷபங்களினாலே நறுமணம் வீசப் பெறுபவர்கள் இவர்களின் திருமேனி முழுவதும் நறுமணம் கமழநின்றாலும் முக்கியமாகத் திருமுடியிலேயாயிற்று அது காணலாவது; வணங்காமுடி மன்னராகவன்றிக்கே வணக்கமே கொண்டிருக்கும்படியைச் சொல்லுகிறது. [கடை திறவாய்] கடையென்கிற சொல்லுக்கு ஆபண மென்னும் பொருளே ஸ்வாபதேசத்தில் கொள்ளத்தகும், *ஸர்வவித்யா நிஷத்யா*

acharya.org

என்றன்றோ மஹான்களைச் சொல்லுவது! அவரவர்கள் எதிர்பார்க்கும் ஸகலார்த்தங்களும் கிடைக்கக்கூடிய கடை காலக்ஷேபகோஷ்டி; அதிலே எங்களைப் புகவிட வேணுமென்று அபேக்ஷிக்கிறபடி. [வந்தெங்கும் கோழி யழைத்தன காண்] கோழியானது குப்பையில் கிடக்கும் ரத்னங்களையும் மூக்கால் கொந்தியெடுத்து விடுமென்று ப்ரஸித்தி. ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணத்தில் "கொக்கைப் போலிருக்கும் கோழியைப் போலிருக்கும்" என்பது ப்ரஸித்தமான வார்த்தை. ஸாரக்ராஹிகளான ஸச்சிஷ்யர்கள் பலவிடங்களிலிருந்தும் பிரார்த்திக்க வந்திருக்கிறார்களென்கை. [மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்] *மாதவீம் மாதவப்ரியாம்* என்கிற ச்ருதியின்படியே மாதவ திவ்ய மஹிஷியாகிய பிராட்டியை மாதவி யென்கிறது. பந்தல் என்று நிழல் தருமிடத்தைச் சொல்லுகிறது. பிராட்டியின் அபிமான நிழலிலே யொதுங்கியிருக்கின்ற குயில்களென்றதாயிற்று. குயில்கள் பரப்ருதமென்று பெயர் பெற்றவை; அதுபோலே *உப த்வா ரேஷயே* என்று வைத்துக்கொள்ளும் ஆசாரியர்களால் போஷிக்கப் படுமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள். *பிகாகூஜதி பஞ்சமம்* என்கிறபடியே குயில் கூவுவது பஞ்சமமாக மெனப்படும். ஆசாரியர்கள் சொல்லும் சொற்கள் 'இது ஐந்தாவது வேதமோ!' என்னலாம்படியிருக்கும். ஃமாம்பொழில் தளிர் கோதிய மடக்குயில்வாயது துவர்ப்பெய்த, தீம்பலங்கனி தேனது நுகர் திருவெள்ளறை* என்கிறபடியே முதலிலே மாந்தளிர்களை யுண்டு அதனால் வாய் துவர்த்துப்போக, பிறகு பலாப்பழத் தேனைப் பருகிக் களிக்குமாம் குயில்கள்; அப்படியே முதலில் காவ்ய நாடகாதிகளிலும் ஸாமாந்ய சாஸ்த்ரங்களிலும் போதைப் போக்கி வெறுத்து, பிறகு ரஸ்ய ரஹஸ்யார்த்த ஸேவைகளிலே விருப்பம் கொண்டிருக்குமவர்கள் குயிலாக விவக்ஷிதர்கள். [பந்தார் விரலி!] *ஹரே விஹரஸி க்ரீடா கந்துகைரிவ ஜந்துபி:ஃ என்கிறபடியே லீலோபகரணமா யிருக்கின்ற பிராணிகளையே பந்தாகச் சொல்லுகிறது இவர்களைக் கைப்படுத்தி அவர்களோடே போது போக்குவர் ஆசாரியர். [செந்தாமரைக் கையால்] யதிராஜ ஸப்ததியில் "உந்நித்ரபத்மஸுபகாம் உபதேச முத்ராம்" என்று கூறியிருப்பதை நினைப்பது; உபதேசமுத்திரை கொண்ட திருக்கையினாலென்றபடி. [சீரார்வளை யொலிப்ப வந்துதிறவாய்] த்வநிப் பொருள்கள் மல்கும்படி உபதேசித்தருள வேணுமென்கை [மகிழ்ந்து] எம்முடைய நிர்ப்பந்தத்திற்காக வன்றிக்கே தம்பேறாக உகந்து உபதேசிக்க வேணுமென்கை அந்தரங்கமான வொரு ஸ்வாபதேசார்த்தம் கேளீர். *தக்கார் பலர் தேவிமார் சாலவுடையீர்* என்றும் ஃபல்லாயிரம் பெருந்தேவிமாரொடு* என்றும் சொல்லுகிறபடியே கண்ணபிரானுக்கு இவ்வவதாரத்தில் பல பல தேவிமார்களிருந்தாலும் திருவாய்ப்பாடியில் நப்பின்னைப் பிராட்டியே மிகச்சிறந்த அலத்தேவியாவள், இது போல எம்பெருமானுக்கு அபிமத விஷய பூதர்களான ஆசாரியர்கள் பல பலரிருந்தாலும் எம்பெருமானாரொருவரே 'தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர" என்னும்படி அவன் திருவுள்ள முகந்த பேராசிரியராவர். ஒருவர்க்கு மடங்காத ஏழு காளைகளை வலியடக்கிக் கண்ணன் நப்பின்னைப் பிராட்டியை மணம் புணர்ந்தான். பகவான் எம்பெருமானாரைப் பரிக்ரஹித்து ஒருவர்க்குமடங்காத காளைபோன்ற ஏழுவிரோதிகளைக் களைந்தொழித்தான். அந்த ஏழு விரோதிகள் யாவரென்னில், "அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே" என்பதிற் சொல்லப்பட்ட அறுவரும், "செறுகலியைச் சிறிது மறத்தீர்த்துவிட்டான் வாழியே" என்பதிற் சொல்லப்பட்டகலிபுருஷனுமாக எழுவர். இந்த நப்பின்னையைக் "கந்தங்கமழுங்குழலீ!" என்று கேசபாசத்தினழகையிட்டுக் கூறினது "எம்பெருமானார் மதாந்தத்ர ஸந்யாஸிகளைப்போலே சிகையைத்துறவாமல் "கமநீயசிகாநிவேசம்' என்றும் சிகயா சேகரிணம் பதிம் யதீநாம்' என்றும் ஃகாரிசுதன் கழல்சூடிய முடியும் கனநற்சிகை முடியும் என்றும் சொல்லுகிறபடியே சிகாபந்த ஸௌந்தர்யத்துடனெழுந்தருளியிருந்தபடியை நினைப்பூட்டும், பந்தார் விரலி! என்றதும்

மிகப் பொருத்தம், பந்து என்பது ஆசார்ய ஹ்ருதயத்தில் “பந்து கழற்பாவை ......பொங்கைம் புலனில் போக்யாதிஸமூஹம்” என்றருளிச் செய்தபடி லீலாவிபூதி முழுவதையும் சொல்லுகிறது. இது நித்யவிபூதிக்கு முபலக்ஷணம். ஸ்வாமிக்கு உடையவர் என்று திருநாமம், உபய விபூதியையும் தம்கையிலே யுடையவர் என்றபடி. அதுவே பந்தார்விரலி யென்பதனுல் ஸூசிதமாகிறது. ... ... (18)

19 குத்துவிளக்கெரிய

தோரண விளக்கென்றும் குத்துவிளக்கென்றும் விளக்கில் இருவகையுண்டு. தோரண விளக்கு பெயர்த்துக்கொண்டு போக முடியாதபடி இருந்தவிடத்திலேயேயிருக்கும். குத்துவிளக்கு எங்கும் பெயர்த்துக்கொண்டு போகலாம்படியிருக்கும். தோரண விளக்கின் ஸ்தானத்தில் திருக்கோட்டியூர் நம்பியையும், குத்துவிளக்கின் ஸ்தானத்தில் எம்பெருமானாரையுங் கொள்க. திருக்கோட்டியூர் நம்பி தம் ஊரிலேயே தம் திருமாளிகையிலேயேயிருந்தவர். ஸ்வாமி எங்கும் பெயர்ந்தவர். “கோட்டுக்கால் கட்டின்மேல்” என்றவிடத்து “ஏகதேச விக்ருதம் அநந்யவத் பவதி” என்ற வட மொழி வியாகரணம் வல்லாரின் கொள்கைப்படி (கோட்டு) என்றதை ‘கோட்டில் என்றுகொள்க. கோட்டியூர் திருக்கோட்டியூர் என்றதாயிற்று. குத்துவிளக்கென்று நிரூபிக்கத்தக்க உடையவர். எரிய-ஜ்ஞானவிளக்கம் பெறுவதற்காக [ரஹஸ்யார்த்த ஜ்ஞான விசேஷத்திற்காக] கோட்டியூருக்கு எழுந்தருளினபடி ஸூசிதமாகிறது. அங்கே நம்பிகள் ஸ்வாமிக்கு அர்த்தவிசேஷத்தை யுபதேசித்தபோது ‘இதை ஒருவர்க்கும் சொல்லுவதில்லை’ யென்று தம் திருவடிமேல் ஆணையிடும்படி நியமித்தார். அது “கால்கட்டில்” என்பதனுல் ஸூசிதம். கால்—திருவடி; கட்டு-ஆணை பிறகு ஸ்வாமி செய்ததென்ன? அப்படியே சபதம் செய்து கொடுத்துச் சில விலக்ஷணாதிகாரிகளுக்கு உபதேசிக்கும் பொருட்டு ஸன்னிதியின் மேலேறினுர். (அது மேலேறி) என்பதனுல் ஸூசிதம் அப்படி அவர் ஆசார்ய நியமனத்தையும் அதிக்ரமித்துச் செய்ததற்கு ஹேது அவருடைய ஹ்ருதயவைசால்யமேயாதலால் அது (மலர் மார்பா!) என்பதனுல் ஸூசிதம் மலர்—விசாலமான, ‘மார்பா—ஹ்ருதயமுடையவரே! என்றபடி மற்றுமுள்ள சொற்றொடர்களும் இங்ஙனே பொருந்துமாறு காண்க.

20 முப்பத்துமூவர்.

“செப்பன்ன மென்முலை யென்று தொடங்கி நப்பின்னைப் பிராட்டியின் அவயவ ஸௌந்தர்யாதிசயம் பேசப்படுகிறது. ஸ்ரீ வசந பூஷணத்தில்—பிராட்டி சேதனனையும் திருத்துவள், எம்பெருமானையும் திருத்துவள் என்று ஸாதிதத்துவருமிடத்தில் “இருவரையும் திருத்துவது முபதேசத்தாலே; உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை அருளாலே திருத்தும்; ஈச்வரனை அழகாலே திருத்தும்” என்றருளிச் செய்திருக்கையாலே, எம்பெருமானை அஸ்மதாதிகள் திறத்தில் அபிமுகனுக்கச் செய்வதற்கு உபயோகப்படும் வடிவழகாகையாலே இங்கு அதனை வருணிக்கிறது. ஸ்ரீவசநபூஷணத்தில் ஸாதித்தது ஸ்ரீ மஹாலக்ஷ்மியைப் பற்றியேயொழிய நப்பின்னைப் பிராட்டியைப் பற்றியன்றே யென்று சங்கிக்க வேண்டாதபடி “நம்பின்னை நங்காய் திருவே” என்றருளிச் செய்யப்பட்டது. இவளையும் திருவின் அம்சபூதையாகக்கொள்கவென்றபடி. ஆசார்ய பரமான ஸ்வாபதேசப் பொருளில் “ஆசாரியன் சிச்சனுயிரைப் பேணுமவன், தேசாரும் சிச்சன் அவன் சீர்வடிவை” என்கிற உபதேச ரத்தினமாலைப் பாசுரப்படியே சிஷ்யர்களுக்கு ஆசார்யருடைய திவ்யமங்கள விக்ரஹமே பரமோத்தேச்யமென்கிற சாஸ்த்ரார்த்தம் உணரத்தக்கது. “சீராரு மெதிராசர் திருவடிகள் வாழி” என்றும் “செய்ய தாமரைத் தாளிணை வாழியே” என்றும் நாம் நிச்சலும் அநுஸந்திப்பது இதுபற்றியே யன்றோ.

acharya.org

(உக்கமுந் தட்டொளியுமித்யாதி.) உக்கமாவது—விசிறி; தட்டொளியாவது கண்ணாடி. இவ்விரண்டைச் சொன்னது மற்றுமுள்ள கைங்கர்யோபகரணங்களையும் சொன்னபடி. பகவத் ஸந்நிதியிலும் ஆசார்ய ஸந்நிதியிலும் கைங்கர்யமே பரம புருஷார்த்தமென்று காட்டிற்றாயிற்று. ... ... (20)

21 ஏற்ற கலங்களெதிர் பொங்கி

(துயிலெழாய்) "அநாதிமாயயா ஸுப்த:" என்றிருக்கு மெங்களைத் துயிலெழுப்ப வேணும் என்கை. தேவரீர் திருக்கண்விழித்து அடியோங்களைக் கடாக்ஷித்தருள வேணுமென்றதாகவுமாம். இப்படிப்பட்ட பாகவதோத்தமர்களின் திருமாளிகைக்குத் தாங்கள் வந்து சேர்ந்தபடியை த்ருஷ்டாந்த பூர்வமாகப் பேசுகிறார்கள் மேல் மூன்றடிகளினால். (மாற்றாருனக்கு வலிதொலைந்து இத்யாதி.) மாற்றார்—மாறுபாடு கொண்டவர்கள் பகைவர்களென்றபடி. ப்ரமாணங்களையும் ப்ரமேயங்களையும் ப்ரமாதாக்களையும் தூஷித்துக்கொண்டு வேறுபட்டிருந்த மதாந்தரஸ்தர்கள் இங்கு மாற்றார் எனப்படுகிறார்கள். அவர்கள் வந்து வாதஞ் செய்து வலிமாண்டு அடிபணிந்தார்களென்பது ஆளவந்தார் எம்பெருமானார் பட்டர் நம்பிள்ளைபோல்வாருடைய சரிதைகளிலே விசதம். யாதவப்ரகாசர் யஜ்ஞமூர்த்தி முதலானார் எம்பெருமானார் திருவடிகளிலே வலிதொலைந்து அடிபணிந்தவர்கள். "தஞ்சிறை ஞானியர்கள் தாம் புகழும் வேதாந்திகள் நஞ்சீயராகி பட்டர் திருவடிகளிலே வந்து பணிந்ததும், துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் நடுவில் திருவீதிப் பிள்ளை பட்டர் முதலானார் நம்பிள்ளை திருவடிகளிலே வந்து பணிந்ததும் ப்ரஸித்தம் அவரவர்கள் குணங்களுக்குத் தோற்றுப்போற்றிப் புகழ்ந்து கொண்டு வந்து புகுந்ததுபோல் அடியோங்களும் வந்து புகுந்தோம். எம்மையும் ஆட்கொண்டருளவேணும்—என்றுவேண்டிக்கொள்ளுகிறபடி. அத்வேஷிகளாகவும் அநுகூலர்களாகவுமிருந்தால் வந்து பணிவதிற்காட்டிலும் த்வேஷிகளாயிருந்தவர்கள் மாச்சரியம் நீங்கி வந்து பணிவது விசேஷமாதலால் அஃது இங்கெடுத்துப் பேசப்பட்டது. ... ... (21)

22 அங்கண்மாஞாலத்தரசர்

ஆசாரியர் சிஷ்யனுக்குப் பெருப்பெருத்த அர்த்த விசேஷங்களை முதலிலேயே கொட்டிவிட முடியாதே. பெரிய திருமொழியில் (5-1-2) "புள்ளும் பிள்ளைக்கு இரைதேடும்" என்றவிடத்து பட்டரருளிச் செய்யுமது நினைக்கத்தக்கது. சிறுசிறு விஷயங்களாகக் கொள்ளும்படி செய்வது ஆசார்யக்ருத்யம்: அதைத் தெரிவிக்கிறபடி (திங்களும் ஆதித்தியனுமெழுந்தாற்போல்) பகவத் விஷய ரஹஸ்யக்ரந்தப் பொருள்களை யுபதேசிக்கும்போது ஆசார்யர் சந்திரனைப்போலே குளிர்ந்திருப்பர். ஸ்ரீ பாஷ்ய சததூஷண்யாதிகளை விவரிக்கும்போது ஸூர்யனைப்போல் தபிப்பர் இத்தால் உபய வேதாந்தப் பொருள்களையும் எங்களுக்கு உபதேசிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறபடி. (அங்கணிரண்டுங்கொண்டு) இரண்டு கண்களாவது (ஆசார்யனுடைய) வெளிக்கண்ணும் உட்கண்ணும் "யம் யம் ஸ்ப்ருசதி பாணிப்யாம் யம் யம் பச்யதி சக்ஷுஷா" என்றபடி ஸதாசார்யர் வெளிக்கண்ணாலே கடாக்ஷித்தாலும் போதும்; ஆளவந்தார் எம்பெருமானாரை "ஆம்முதல்வனிவன்" என்று உட்கண்ணாலே அநுக்ரஹித்தது போல அநுக்ரஹித்தாலும் அமையும். இரண்டு கடாக்ஷமும் சேர்ந்து விட்டால் கிம்புந:? இங்கு "ஏகயைவகுரோர் த்ருஷ்ட்யா த்வாப்யாம்வாபி லபேதயத், ந தத் திஸ்ருபிரஷ்டாபிஸ் ஸஹஸ்ரேணாபி கஸ்யசித்" என்ற ஸுபாஷித நீதிச்லோகரத்நம் அநுஸந்தேயம். இதன்பொருளாவது, ஆசார்யன் வெளிக்கண்ணால் மட்டுமோ உட்கண்ணையும் சேர்த்து இருகண்களாலுமோ கடாக்ஷித்தருள அதனாலுண்டாகும் பேறு முக்கட்பிரானுடைய மூன்று கண்களாலும் எண்கண்ணனான நான்முகனுடைய எட்டுக்

acharya.org

கண்களாலும் துணை மலர்க்கண்களாயிரத்தாய் என்றும் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷஸ் ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத்" என்றும் ஸஹஸ்ராக்ஷனாக வோதப்பட்ட ஸ்ரீமந்நாராயணனுடைய ஆயிரங்கண்களாலும் உண்டாகமாட்டாதென்கை நோக்கவேணுமென்னுமல் 'நோக்குதியேல்' என்கையாலே அவனுடைய இயற்கையின்னருள் மூலமான கடாக்ஷமே சிறந்ததென்றும், நம்முடைய நிர்ப்பந்தமடியாக வருகிற கடாக்ஷம் விரஸமானதென்றும் காட்டிற்றாகிறது.

எம்பெருமானுடைய திருமேனியில் மூன்று திவ்யாவயவங்கள் பக்தர்களுக்கு முக்கியமானவை. அவற்றுள் முதல் அவயவம் திருக்கண்; "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத் மதுஸூதந; ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்தசிந்தக;" என்றபடியே ஜாயமாந காலத்திலேயே கடாக்ஷித்து ஸாத்விகத்வத்தையுண்டாக்க வல்லதன்றோவிது. அப்படி கடாக்ஷிக்கப் பெற்றவர்களுக்குத் திருவடியே தஞ்சமாகிறபடியால் அது இரண்டாவதான அவயவம், அப்படி திருவடிகளிலே விழுந்தவர்கள் "அஞ்சேலென்று கைகவியாய்" என்று அபயப்ரதானத்தையே விரும்பிக்கொண்டிருப்பார்களாதலால் அபய முத்ராஞ்சிதமான ஹஸ்தம் மூன்றாவதான அவயவம். ... ... (22)

23. மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்.

[உன்கோயில்நின்று இங்ஙனே போந்தருளி] உன் கோயிலென்று ஸ்வாமியின் திருவவதாரஸ்தலமான ஸ்ரீ பெரும்பூதூரை விவக்ஷிக்கிறது. அங்குநின்றும் பெருமாள் கோயிலாகிய காஞ்சீபுரிக் கெழுந்தருளியும் திருமலைக்கெழுந்தருளியும் திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளியும் திருநாராயண புரமெழுந்தருளியும்—இங்ஙனே போந்தருளினபடியைச் கூறுகிறது.

[கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து] சிங்காசனம், சீரிய சிங்காசனம், கோப்புடைய சீரியசிங்காசனம் என்று மூன்று வகைப்பட்ட ஆஸனமாகக் கொள்ளவேணும். யதிராஜஸப்ததியில் (காதா தாதாகதாநாம் கலதி) என்ற ச்லோகத்தின் முடிவில—"பஜதி யதிபதௌ பத்ரவேதீம் த்ரிவேதீம்" என்று எம்பெருமானார் த்ரிவேதியாகிற சிங்காசனத்திலே யெழுந்தருளியிருப்பதாகச் சொல்லிற்று. இதன்பொருளை ஒருவ்யாக்க்யானகர்த்தாவும் உள்ளபடி உரைத்திலர்; —த்ரயாணும் வேதாநாம் ஸமாஹார: த்ரிவேதீ, மூன்று வேதங்கள் என்றபடி. ரிக்வேதம் யஜுர்வேதம் ஸாமவேதம் ஆகிற மூன்று வேதங்களும் எம்பெருமானார்க்குச் சிங்காசனமாயிருந்தனவாக உரைப்பது சிறப்புடைத்தன்று. பேதச்ருதி, அபேதச்ருதி, கடகச்ருதி என்று மூன்றாக வகுக்கப்பட்ட ச்ருதிகளே த்ரிவேதியாக வேதாந்த தேசிகனுக்கு விவக்ஷிதம். அத்வைதிகளுக்கு அத்வைத ச்ருதியொன்றே ஆஸனமாயிற்று; த்வைதிகளுக்கு த்வைதச்ருதி யொன்றே ஆஸனமாயிற்று. நம் ஸ்வாமிக்கோ வென்னில் அந்தவுபயச்ருதிகளோடுகூட கடக ச்ருதியும் ஆஸனமாயிற்று. அதாவது, ஸ்வாமி ஒரு ச்ருதியையும் தள்ளாமல் மூன்று ச்ருதிகளையும் முக்கியார்த்தமாகவே கொண்டருளி விசிஷ்டாத்வைத தர்சன நிர்வாஹம் செய்தருளினபடியால் இவர்க்கு அம்மூன்று வேதபாகங்களும் சீரிய சிங்காசனமாயிருந்தன வென்கை. இப்படிப்பட்ட ஆசார்ய ஸார்வபௌமரிடத்தே வந்து சேர்ந்த சிஷ்யர்கள் யாம் வந்த காரியமாராய்ந்தருளவேணுமென்று ப்ரார்த்த்தவாறு ... ... (23)

24 அன்றிவ்வுலக மளந்தாய்

[கன்றுகுணிலா வெறிந்தாய்!] வத்ஸாஸுரனைக் கொண்டு கபித்தாஸுரனைக் கண்ண பிரான் முடித்ததானது முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவது போன்றது ஆசாரியர்கள் ப்ரதிபக்ஷிபக்ஷப்ரதி க்ஷேபம் பண்ணும்போது அவர்களின் பரஸ்பரவ்யாஹத பாஷணங்களைக்

acharya.org

கொண்டே அவ்வோ மதநிரஸனங்கள் செய்தருளும்படிக்கு இது உவமையாகும். [குன்று குடையா வெடுத்தாய்] கோவர்த்தன மென்னும் கொற்றக் குடையைக் கண்ணபிரான் தாங்கி நின்ற சரிதையில் மிகச் சிறந்ததொரு மஹாகுணம் விளங்குகின்றது. இந்திரன் மேகங்களை ஏவி ஏழுநாள் விடாமழை பெய்வித்துத் திருவாய்ப்பாடிக்குப் பெருந்தீங்கிழைத்த காலத்தில் இந்த அஸஹ்யாபசாரத்திற்காகக் கண்ணபிரான் அவனைத் தலையறுத்துப் பொகடலாமாயிருந்தும் 'இவனுணவைக் கொள்ளைகொண்ட நாம் உயிரையும் கொள்ளை கொள்ளலாகாது; கை சலித்த வாறே தானே ஓய்ந்து நிற்கின்றான்' என்று திருவுள்ளம்பற்றி,ஸ்வக்ருத்யமான ரக்ஷணத்தைச் செய்து போந்ததுண்டே, அதுதான் மஹத்தானகுணம்; இதுபோலவே ஆசார்ய சிகாமணிகளும் தங்களுக்குப் பிறர் எவ்வளவு தீங்கிழைத்தாலும் அதனைப் பொருள்படுத்தாமலும், அதற்காக அவர்களை நிக்ரஹியாமலும் "நான் பெற்றபேறு நாலூரான் பெறவேணும்" என்று ஆசாஸித்த கூரத்தாழ்வானைப் போலே அநுக்ரஹமே பணியாக நிற்பர்களென்பது இங்கு உள்ளுறை பொருள், [வென்றுபகை கெடுக்கும் நின்கையில்வேல் போற்றி.] இங்கு வேலென்றது திருவாழியாழ்வானை; [கொல்வது கோல்; வெல்வது வேல்] திருவாழியைச் சொன்னது திருச்சங்குக்கும் உபலக்ஷணம், ஆசாரியர் திருவாழி திருச்சங்குகளினால் திருவிலச்சினை செய்து நம் போல்வாருடைய சேஷத்வவிரோதிகளை யெல்லாம் நிரஸித்து ✻தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்✻ என்று நம்வாயாற் சொல்லும்படி செய்துவைப்பர். இனி, வேல் என்பதற்குத் திருவாழியாழ்வானென்று பொருள்கொள்ளாமல் ✻கூர் வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்✻ என்றவிடத்திற்போல இடைச்சாதிக்குரிய ஒருகோல் என்று பொருள் கொள்ளுமளவில், ஆசார்யபரமான பொருளில் ✻சாரித்ரோத்தாரதண்டம்..... வஜ்ரதண்டம்த்ரிதண்டம்✻ என்கிற தாடீபஞ்சகச்லோகத்தை யநுஸந்தித்துக் கொள்வது. ••• (24)

25 ஒருத்திமகனாய்ப் பிறந்து.

[நெருப்பென்ன நின்ற நெடுமாலே] ✻பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந:✻ என்றும் பாஷண்ட ஸாகர மஹாபடபா முகாக்நி:✻ என்றும் ஸ்ரீராமாநுஜரும் நெருப்பாகச் சொல்லப் பட்டிருப்பது (தாடீபஞ்சகே) காண்க. [நெடுமாலே] ✻மாலாய்ப் பிறந்த நம்பியாய் மாலே செய்யும் மணாளனை கண்ணபிரான் அடியார் பக்கல் வியாமோஹமே வடிவெடுத்திருப்பன்: ஸ்வாமி யெம்பெருமானாரும்✻ பொன்னரங்கமென்னில் மயலே பெருகுமிராமானுசன்✻ என்றும் ✻யோ நித்யம் அச்யுத பதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹத:✻ என்றும் சொல்லுகிறபடியே பகவத் விஷயத்தில் வியாமோஹமே வடிவெடுத்திருப்பர், [உன்னை யருத்தித்து வந்தோம்] அருத்தித்து என்றது, அர்த்தித்து—ப்ரார்த்தித்து என்றபடி. ✻கையில் 'கனியென்ன கண்ணனைக் காட்டிந்தரிலும், உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான்✻ என்கிற அத்யவஸாயத்தோடே வந்திருக்கிறோமென்றபடி. [திருத்தக்க செல்வம்] ✻துல்ய சீலவயோ வ்ருத்தாம் துல்யாபிஜந லக்ஷணாம், ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேய மஸிதேக்ஷணா✻ என்று திருவடி சொன்னபடியே பிராட்டிக்குத் தக்க பெருமாளும், பெருமாளுக்குத் தக்க பிராட்டியுமாக அமைந்த தகுதியான செல்வத்தைப் பாடிக்கொண்டே வந்தோமென்பது அந்யாபதேசத்தில. ஸ்வாபதேசத்திலோவென்னில்; பெரிய பிராட்டியாரோடொத்த செல்வமுடையவர் ஸ்வாமி யெம்பெருமானார் நம்போல்வார்க்குப் புருஷகார க்ருத்யம் பண்ணி எம்பெருமானடி சேர்ப்பிக்கையே பிராட்டிக்குச் செல்வம். இதுவேதான் எம்பெருமானார்க்கும் செல்வமாகும். அவருடைய திருவடிஸம்பந்த மில்லாதார்க்கு மோக்ஷமில்லை யென்பது

acharya.org

ஸம்ப்ரதாயம். [சேவகமும் யாம்பாடி] இரட்டுற மொழிதலால் சேவகமென்கிற சொல் பரத்வ ஸௌலப்யங்களைச் சொல்லும். தமிழில் சேவகமென்று வீரத்திற்குப் பெயராதலால் பரத்வம் தெரிவிக்கப்பட்டதாகும்; வடமொழி விகாரமென்று கொண்டால் ஸேவக வ்ருத்தி செய்வதென்று பொருள்பட்டு ஸௌலப்யம் தெரிவிக்கப்பட்டதாகும். [வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து] வருத்தம் தீரவேணுமென்றாலே போதுமே; தனிப்பட மகிழ்ச்சியும் சொல்லுவானேன்? என்னில்; பிறருடைய மதத்தில் 'ஆத்யந்திக து:க்கத்வம்ஸ ஏவ மோக்ஷ:' என்று வருத்தங்கள் தீருகை மட்டுமே மோக்ஷமாகச் சொல்லப்படுகிறது. எம்பெருமானார் ஸித்தாந்தத்தில் அங்ஙனன்றிக்கே, துக்கத்வம்ஸம் தவிர *உற்றேனுகந்து பணிசெய்து உனபாதம் பெற்றேன்* என்னுமாழ்வார் ஸ்ரீஸூக்தியின்படியே கைங்கரியத்தினாலுண்டாகும் ஆனந்தாநுபவமும் சேர்ந்துதான் மோக்ஷமெனப்படுகிறது. இதுவும் இங்கு ஸூசிதமாகிற தென்க,

26 மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான்.

(மார்கழி நீராடுவான் மேலையார் செய்வனகள்.) மார்கழி நீராடுகையாவது மார்க்கசீர்ஷாவகாஹனமென்றும் அதாவது (மார்க்க-சீர்ஷ-அவகாஹனம்) பகவத் ப்ராப்தி மார்க்கங்களில் தலையான ஆசார்யபிமானத்திலே யொதுங்குகையென்றும் முன்னமே விவரிக்கப்பட்டுள்ளது இது சிஷ்டாசார ஸித்தம் என்று இங்கே தெரிவிக்கப்படுகிறது. இவ்விடத்தில் "அந்தோ நந்தக்ரஹண வசக" என்கிற ந்யாஸ திலக திவ்யஸூக்தியை நினைப்பது, "தததே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ" என்கிற (அவ்விடத்து) ஸ்ரீஸூக்தியும் நினைக்கத் தகும் சங்கு முதலானவற்றை வேண்டுவதன் கருத்தாவது, பாவப்ரதாந நிர்தேசந்யாயத்தாலே தாங்களை சங்காகவும் பறையாகவும் பல்லாண்டிசைப்பாராகவும் விளக்காகவும் கொடியாகவும் விதானமாகவும் ஆகப்பெற வேணுமென்று ப்ரார்த்திக்கிறபடி சங்குபோல சுத்த ஸாத்விகர்களாகக் கடவோம்; உன்றன் கைத்தலத்தைவிட்டு அகலாதிருக்கக் கடவோம் (குருதலவாஸமே கதியாக இருக்கக்கடவோமென்கை.) பறைபோலே ஆசார்யப்ராசார்ய பரமாசார்யர்களின் புகழ்களை எண்டிசையுமறிய வியம்பக் கடவோம். எம்பெருமானுக்குப் பெரியாழ்வார் போலே ஸதாசார்யரான தேவரீருக்கு நாங்கள் பல்லாண்டுபாடுமவர்களாக ஆகக்கடவோம் விளக்கு எப்படி ஸ்வஸ்மைஸ்வயம் ப்ரகாசமாயும பரப்ரகாசகமாயுமிருக்கிறதோ அப்படி நாங்களும் ஸ்வபர ப்ரகாசகர்களாகக்கடவோம். கொடியாவது த்வஜம்; ஸ்ரீமலலக்ஷ்மணயோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜமென்று விருதுபெறக்கடவோமென்கை *தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜோ யஸ்தே விதாநம் வ்யஜநம் த்ரயீமய:* என்கிற ஸ்தோத்ர ரத்ந ஸூக்தியிலே பெரிய திருவடி விதானமாகச் சொல்லப்பட்டார்; *தொடுத்து மேல் விதானமாய பௌவநீரராவணை* என்கிற திருமழிசையாழ்வார் பாசுரத்திலே திருவனந்தாழ்வான் விதானமாகச் சொல்லப்பட்டார். ஆக, பெரிய திருவடியைப் போலவும் திருவனந்தாழ்வானைப் போலவும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித அசேஷகைங்கர்ய துரந்தரர்களாகக் கடவோமென்றதாயிற்று. ... (26)

27 கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா!

[ஆடையுடுப்போம்] இதுகாறும் ஆடையுடாமலா இருக்கிறார்கள்? இப்போது ஆடையுடுப்போமென்றதன் கருத்தைக் கேண்மின். அரையில் ஆடையுடுப்பதென்பது பசுக்களுக்கும் பறவைகளுக்குமில்லை மானிடர்களுக்கேயாகிறது. *ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந:*என்கிறபடியே பசுப்ராயர்களாய் ஆடையுடுக்கயோக்யதையற்றிருந்த நாங்கள், ஆசார்யரே! தேவரீருடைய திருவருளால் ஞானவிளக்கம் பெற்று *வ்ருத்த்யா பசுர் நரவபு* என்கிற அபக்யாதியொழிந்து 'நாம் ஆடையுடுப்பது ஏற்கும்' என்று நினைக்கப்பெறுவோமாக என்றபடி. அதன்

acharya.org

பின்னே பால்சோறு என்றதில் “ஸோச்நுதே ஸர்வாந் காமாந்ஸஹ; ப்ரஹ்மணா விபச்சிதேதி” என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட அசனமே விவக்ஷிதம். வெறுமனே சோறு என்னாமல் பால்சோறு என்கையாலே உத்தமமான அன்னம் கூறப்பட்டதாகி பகவதநுபவத்திற் காட்டிலும் உத்துங்கமான பாகவதாநுபவம் தெரிவிக்கப்பட்டதாகிறது. அதற்குமேலும் நெய்பெய்து என்று விசேஷித்து அன்னத்தில் அதிகமான அதிசயம் சொல்லுகையாலே மிக மேம்பட்டதான ஆசார்யகுணாநுபவமும் தெரிவிக்கப்படுகிறது. ஆக, பகவத்பாகவத ஆசார்ய குணாநுபவத்தி லூன்றியிருக்கவேணுமென்றதாயிற்று. மூழங்கை வழிவார என்றதில் உயர்ந்தகருத்து அடங்கியுள்ளது; பெருவிடாயர்க்குத் தண்ணீர்ப்பந்தலில் கரகத்தினால் தீர்த்தம்விட ஒருவர் இருகையேந்திக் குடிக்குமிடத்து அவருடைய பின்னே நிற்கிற விடாயர்கள் தங்கள் விடாயின் மிகுதியினால் தாமதம் பொறுத்திருக்கமாட்டாமல் முன்னே குடிப்பாருடைய மூழங்கைகளின் வழியாகப் பெருகும் தண்ணீரைக் குடிப்பர்கள். இங்ஙனே பரம்பரையாக அநுபவிக்கப் பெறவேணுமென்பது ஸூசிதம். கீழே பல்கலனும் யாமணிவோம் என்றும் “ஆடையுடுப்போம்” என்றும் வினைமுற்றையிட்டுச் சொன்னது போல இங்கும் “பால்சோறு உண்போம்” என்று கூறியிருக்கவேண்டும். அப்படி கூறாதது உண்கையிலே முக்கியமான விருப்பமில்லையென்று காட்டுதற்காக. கூடியிருந்து குளிர்வதுதான் முக்கியமான உத்தேச்யமென்க. (27)

28 கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்

ஆசார்ய பரமாகச் சொல்லுகிறோம். [குறைவொன்றுமில்லாத கோவிந்தா!] ஞானத்திலோ அனுட்டானத்திலோ எதிலும் ஒரு குறையுமில்லாத வித்வந்மணியே! என்றபடி. [கறவைகள் பின்சென்று கானஞ் சேர்ந்து உண்போம்] இந்தச் சொல்தொடர் இரட்டுற மொழிதலால் இதுவரை இருந்த நிலைமையையும், இனிமேல் இருக்க விரும்புகிற நிலைமையையும் காட்டும். பசுப்ராயர்களான பாமர ஜனங்களின் பின்னே சென்றுகொண்டு ஸம்ஸாரமரு காந்தாரத்திலே படிந்து உண்பது உறங்குவதுமே போதுபோக்காகவிருக்கின்றோம் [இனியிருக்க வேண்டும்படி யென்னெனில்;] காமதேநுக்களான ஆசாரியர்களை யநுவர்த்தித்து “ஏதத் ஸாம காயந் நாஸ்தே” என்னும்படி ஸாமகானம் பண்ணுமிடத்தே சேர்ந்து “அஹமந்நாத: அஹமந்நாத:” என்று பரப்ரஹ்மமாகிற அன்னத்தை யநுபவித்துக் களித்திருக்கக் கடவோம். [அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்து யாம்] அறிவில்லாத. அறிவொன்றில்லாத, அறிவொன்றுமில்லாத—தத்வ ஹித புருஷார்த்தங்களுள் ஒன்றிலும் உணர்ச்சியற்ற குடும்பத்திலே பிறந்திருக்கின்ற நாங்கள் [உன்றன்னைப் பிறவிபெருந்தனை புண்ணியமுடையோம்] உன்றன்னை என்றது உன்தன்னால் என்றபடி. “ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜந்ம” என்கிறபடியே தேவரீராலே ஜ்ஞான ஜன்மம் பெறும்படியான பாக்யம் பெற்றோம். [உன்றன்னோடு உறவேல் நமக்கு இங்கொழிக்க வொழியாது] ஆசார்ய ஸம்பந்தம் இந்த விபூதியோடு ஒழிக்க வொழியுமதன்று. “அத்ர பரத்ர சாபி” என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே யாவதாத்மபாவி யுள்ளதொன்று. இங்கு என்றது இவ்விடத்தோடே யென்றபடி. [அறியாத பிள்ளைகளோம் இத்யாதி] ஆசார்ய வைபவ மறியகில்லாத நாங்கள் பட்ட அபசாரங்களை யெல்லாம் க்ஷமித்தருள வேணுமென்கை. ‘அழைத்தனவும்’ என்கிற உம்மையினால் பகவதபசார அஸஹ்யாபசாரங்களையும் ஸமுச்சயிக்கிறபடி. [இறைவா] எங்களுக்கு ஸர்வேச்வர ஸ்தானத்திலிருப்பவரே! என்கை ... ... (28)

29 சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து

இப்பாட்டில் “மற்றை நங்காமங்கள் மாற்று” என்னும் வாக்யம் மிகவும் ஸாரமாகக் கொள்ளத்தக்கது; திருவஷ்டாக்ஷர மஹாமந்த்ரத்தில் மத்யமபதமான நமஸ்ஸானது காகா

acharya.org

க்ஷிந்யாயத்தாலே முன்னேயுள்ள ப்ரணவத்திலே அந்வயித்துப் பின்னேயுள்ள *நாராய ணாயவில் அந்வயித்தும். தன்னோடேயந்வயித்தும் மூன்று விரோதிகளைக் கழிக்கிறதென்பர் இதனை பட்டர் அஷ்டச்லோகியில் *மந்த்ரப்ராஹ்மணி மத்யமேந நமஸா என்கிற இரண்டாம் ச்லோகத்திலே விவரித்தருளுகிறார். முமுக்ஷுப்படியில் "நமஸ்ஸாலே விரோதியைக் கழிக் கிறது" என்றருளிச் செய்து, "விரோதி தான் மூன்று:ஸ்வரூப விரோதியும் உபாய விரோதியும் ப்ராப்ய விரோதியும்" என்றுமருளிச்செய்து. இந்த விரோதிகள் கழியப்பெற்ற நிலைமையில் பேச்சு எங்ஙனேயிருக்குமென்பதைக் காட்டுமளவில் "ஸ்வரூப விரோதி கழிகையாவது, *யானே நீ யென்னுடைமையும் நீயே யென்றிருக்கை; உபாய விரோதி கழிகையாவது *களை வாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேனென்றிருக்கை; ப்ராப்ய விரோதி கழிகை யாவது *மற்றை நங்காமங்கள் மாற்றென்றிருக்கை." என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். ப்ராப்ய விரோதி கழிந்த நிலைமையிற் பாசுரம் இது வென்று காட்டப்பட்டதாயிற்று. இதைச் சிறிது விவரிப்போம். ப்ராப்யமாவது பலன்: பலனை யநுபவிக்கும்போது நேருகிற விரோத மென்னவென்று தெரிந்து கொள்ள வேணும். பலனை யநுபவிக்கும்போது ஆனந்தம் அவச்ய முண்டாகியே தீரும். அந்த ஆனந்தத்தைத் தன்னுடையதாக நினைத்தல் பெரிய விரோதி. நிலாத் தென்றல் சந்தன புஷ்பம் முதலானவை தமக்கு ஒரு உபயோகமின்றிக்கே பிறர்க்கே உபயோகப்பட்டுப்பிறரையே ஆனந்தப்படுத்துகின்றன. தாம் சிறிதும் ஆனந்தம் கொள்வதில்லை. அதுபோலவே பகவானுக்கு நாம் உபயோகப்படுமளவில் அதனால் ஆனந்தப்படுகிறவன் பகவான் தானேயாகவேணும். சேதந லாபம் ஈச்வரனுக்கே பேறு ஆகையாலே பேறு பெற்றவன் தானே ஆனந்திக்க ப்ராப்தியுண்டு. ஆனால் நிலாத்தென்றல் சந்தனம் புஷ்பமென்று த்ருஷ்டாந்தமாகக் காட்டப்பட்ட பொருள்கள் அசேதநமாகையாலே அவற்றுக்கு ஆனந்தமுண்டாக ப்ராப்தியில்லை. நாம் சேதநராகையாலே சைதந்யப்ரயுக்தமாக நேரக்கூடிய ஆனந்தம் எங்ஙனே தவிர்க்க முடியும் என்று கேள்வி பிறக்கும். நம்முடைய கைங்கர்யத்தினால் எம்பெருமான் ஆனந்திக்க, அது கண்டு நாம் ஆனந்திக்க குறையில்லை. நாம் செய்யும் கைங்கர்யம் ஸாக்ஷாத்தாக நம் முடைய ஆனந்தத்திற்கு ஹேதுவாகக் கூடாதென்பதே விஷயம். ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்நத்தில் "கதாஹமைகாந்திக நித்யகிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி" என்கிற ச்லோக ரத்நத் தினால் இந்த தத்வார்த்தத்தை யநுஸந்தித்தருளினார். இந்த ச்லோகத்தில் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்பது ஜீவநாடி. இதில் பகவானே! உனக்கு நான் கைங்கரியம் செய்து எப்போது ஆனந்தப் படப்போகிறேன் என்று கூறாமல் 'உன்னை எப்போது ஆனந்தப்படுத்தப் போகிறேன்' என்று சொல்லியிருப்பதானது *மற்றை நங்காமங்கள் மாற்று* என்கிற இப்பாசுரத்தின் பொருளையே [வடிக்கட்டின ஸத்ஸம்ப்ரதாயார்த்தத்தையே] அருளிச் செய்தபடி. — (29)

30. வங்கக்கடல் கடைந்த மாதவனை

(வங்கக் கடல் கடைந்த) ச்ருதிஸாகரமும் த்ராவிட வேத ஸாகரமுமாகிற கடல்களைக் கடைந்தவர் ஆசிரியர். இங்கே *மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து, துறைப்பால் படுத்தித் தமிழாயிரத்தின் சுவையமிழ்தம், கறைப் பாம்பணைப் பள்ளியானன்பரீட்டங் களித் தருந்த, நிறைப்பான் கழலன்றிச் சன்மவிடாய்க்கு நிழலில்லையே என்ற பிள்ளைப்பெருமாள் பாசுர முணரத்தக்கது. (மாதவனை) மஹாதபஸ்வியென்றபடி, (கேசவனை) ஜிதேந்த்ரியரென்கை. இப்படிப்பட்ட ஆசார்யரைப் பணிந்தவர்கள் யாரென்னில்; (திங்கள் திருமுகத்துச் சேயிழையார்,) ஆசார்ய ஸந்நிதானத்திலிருந்து க்ரஹிக்கப்பட்ட தாபஹரங்களான அர்த்தங்களினால் ஸௌம்யமான திருமுகமண்டலத்தை யுடையவர்களாய் ஆத்ம குணங்களாகிற பூஷணங்களாலே பூஷிதராகப் பெற்றவர்கள், கோபிகள் கண்ணனிடத்திலே பேறு பெற்றாற் போலே சிஷ்யர்கள் ஆசார்ய ஸந்நிதியிலே பெற்றார்களென்க. "விடிவோறே எழுந்திருந்து முப்பது பாட்டையும் அநுஸந்தித்தல், மாட்டிற்றிலனாகில் 'சிற்றஞ்சிறுகாலை' என்கிற பாட்டை அநுஸந்தித்தல். அதுவும் மாட்டிற்றிலனாகில் நாம் இருந்த விருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச்செய்வர், (30)

... ...

ஆண்டாளெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்

ராபர் இரண்டாம் பக்கத்தின் தொடர்ச்சி

ஸ்ரீமத்வேத மார்க்க ப்ரதிஷ்டாபநா சார்யோபய வேதாந்தா சார்யாணும் ஸ்வபக்தவர்ய தநூஜக்ருத்யகரணஸந்துஷ்ட ஸ்ரீவரதராஜதத்த நல்லான் ஸம்ஜ்ஞகாநாம் தப்தாயஸ்துரக ஸமாரோஹண ரூபபணபந்த நிர்வஹண ஸந்ப்ரீத வ்ருஷபாசலாதீச்வரதத்த ஸ்ரீவைஷ்ணவ சக்ரவர்த்தி பிருதபாஜாம் ஸ்ரீபாஷ்யகார நிதேசாதிகத சதுஸ்ஸப்தத்யந்யதமஸிம்ஹாஸநா சார்யபீட நிர்வாஹ துரந்தராணும் சிஷ்யஸஞ்சாரகாலிக—பூதோடபூர்வபாக சிஷ்யோடோத்தரபாக சிபிகாரோஹண நிர்ஜிதகநாக்ய காலீநாம் அதஏவ பூதவாஹந நாமதேய ப்ரதிதாநாம் மார்க்கமத்யே மத்யாஹ்நஸமயே க்ஷுத்பிபாஸாபரீத சிஷ்யஜநா நுக்ரஹாய ஸமீபஸ்தாந் விஷத்ருமாநபி ஸ்வாதுபலாந் க்ருதவதாம், இச்சாகாலகாவேரீ ப்ரவாஹாப்தி ப்ரப்ருத்யத்புத க்ருத்யநிவஹ விக்க்யாதமஹா மஹிமசாலிநாம் பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமாநாம் ஆசார்ய பங்க்தி மத்யவர்த்திநாம் தத்ரபவதாம் ஸ்ரீமதாம் ஆசார்யவர்யாணும் ஸம்பாவநா.

பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌமாநாம் ஸ்ரீநிவாஸாசார்யாணும் மஹாதேசிகாநாம் ஸம்பாவநா,"

வழக்கம்போல் நம் V. N. V. ஸ்வாமி தங்கள் திருமலை நல்லான் சக்ரவர்த்தி "ஆசார்ய புருஷ பிருதாவளிகளை" உரக்க அநுஸந்திக்க ஆசார்ய சம்பாவனை செய்யப்பட்டது.

தம்பதிகட்கு நித்யஸ்ரீர் நித்யமங்களம் என்று பத்ராதிபர் ஸ்வாமியின் மங்களாசாஸனம் கிடைத்தது பெரிய பேறு.

V. P. N.

வருந்துகிறோம்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி திருவடி ஸம்பந்தியும், திருவாலி வாத்யார் கூடஸ்தருமான ஸ்ரீ. உ. வே, ஸ்ரீநிவாஸய்யங்கார் சமீபத்தில் திருநாடலங்கரித்தார். திருவிந்தளூர் ஸ்ரீபரிமளரங்கநாதன் ஸந்நிதியில் 30 விருஷங்களுக்கு முன்பு மூதன் முறையாக அனுதினமும் நடக்கும்படி திருப்பாவை சாற்றுமுறை ஏற்படுத்தியதும், திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீராமன் சந்நிதியில் சிகையில்லாமல் இருந்த கைங்கர்யபரர்களை சிகை வைத்துக்கொள்ள அதிகாரிகளிடம் சொல்லிச் செயல்படுத்தி வைத்ததும் ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் தை அமாவாசை உத்ஸவத்திற்கு திருநாங்கூர் எழுந்தருளி, திரும்புகாலில் திருவாலிக்கு எழுந்தருளும்போது அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மப் பெருமாளுக்கு கருடசேவை உத்ஸவத்தை மீண்டும் ஆரம்பித்து நடத்தியதும், காவிரிப்பூம்பட்டிணத்தில் ஆடி அமாவாசையின்போது திருப்பார்த்தன்பள்ளிப் பெருமாள் தீர்த்தவாரிக்கு எழுந்தருளும் போது, ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனம் நடத்திவைத்ததும் ஸ்ரீவைஷ்ணவ உலகினரால் மறக்க முடியாதவைகளாகும். இவரின் மறைவு ஸ்ரீவைஷ்ணவ உலகினருக்குப் பெரும் இழப்பாகும்.

—பத்ராதிபர்.

acharya.org